# அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 மார்ச்

மலர்:46 இதழ்:3

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன்,
சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி,
வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன்,
செ.பிரகாஷ், ச.தினேஷ்,
இ.மைக்கேல் வில்லியுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி
9677003178

முகவரி:

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளடக்கம்...


1. எழுச்சியான போராட்டங்களில் இளைஞர்களின் பங்கேற்பு... முன்னணி படையாக மாற்றுவோம்...
   *தலையங்கம்* ........ 4
2. மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும்! மார்ச் 8 சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்கள்!
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து* ........ 5
3. இது காலத்தின் கட்டாயம் ........ 12
4. ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மாண்புமிகு அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சுவாத்தை ........ 14
5. யாரிடம் பறித்து யாருக்கு? பட்ஜெட் ரகசியம்! ........ 19
6. தூசி தட்டுவோம் நம் சீற்றத்தை ........ 22
7. 10.2.2025 அன்று நடைபெற்ற 24 மணிநேர தர்ணா போராட்டம் ........ 23
8. மார்ச் எட்டு ........ 28
9. தமிழக அரசும் பழைய பென்சனும் ........ 29
10. நாளை நமக்கான போராட்டம் நடந்தே தீரும்... ........ 32
11. UPS - எதிர் விளைவுகள் ........ 33

தலையங்கம்

# எழுச்சியான போராட்டங்களில் இளைஞர்களின் பங்கேற்பு... முன்னணி படையாக மாற்றுவோம்...

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாட்டில் இயற்றப்பட்ட அறை கூவல் தீர்மானத்தின் 3 வது கட்ட இயக்கத்தை மாவட்ட மற்றும் வட்டகிளை நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பல்வேறு பணிகளுக்கு மத்தியில், தியாகங்களுடனும், அர்ப்பணிப்புடனும் ஸ்தாபன கடமையை மிகச்சரியாக மேற்கொண்டதால் மட்டுமே 10.02.2025 காலை 10 மணி முதல் 24 மணிநேர தர்ணாபோராட்டம், தமிழகம் முழுவதும் மிகசிறப்பாக நடைபெற்றது. இவ்வியக்கம் ஊழியர்களுக்கு உத்வேகத்தையும்;, உற்சாகத்தையும் வழங்கியதோடு புதியதாக பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு புதிய அனுபவத்தை தந்த போராட்டமாக அமைந்தது. மாற்றுஅமைப்பில் பயணிக்க கூடிய ஊழியர்களும் எதிர்காலத்தில் நடை பெறக்கூடிய போராட்டங்களில் நாங்களும் பங்கேற்போம் என்ற உணர்வை ஊட்டியதாகவும், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் போராட்ட பந்தலில் உணவு சமைத்து ஊழியர்களுக்கு வழங்கியதும் எதிர்பாராத வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கடுமையான பணி மற்றும் கொசுக்கடியை பொருட்படுத்தாமல் போராட்டத்தின் தன்மை மாறாமல் நடத்திட்ட தோழர்களின் கடமை உணர்ச்சியையும் தியாகத்தையும் மாநில மையம் வீர வாழ்த்துக்களுடன் பாராட்டுகிறது. அரசு ஊழியர் சங்கத்தின் போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயத்தை படைத்துள்ளது. போராட்ட நிகழ்வுகள் இரண்டு நாட்களும் தினசரி பத்திரிகைகளில் இடம் பெற்றதோடு எல்லாவற்றிற்கும் மேலாக இந்து தமிழ் திசை நாளிதழில் முதல் பக்கத்தில் தமிழகம் முழுவதும் 1 லட்சம் அரசு ஊழியர்கள் பங்கேற்றதாக செய்தி வெளியானதும் குறிப்பிடத்தக்கது.

ஜாக்டோ-ஜியோ பேரமைப்பின் முடிவின்படி பிப்ரவரி 25ந் தேதி அன்று தற்செயல் விடுப்பு எடுத்து மாவட்ட தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பிப்ரவரி 24 இரவு தமிழக அரசின் கோட்டையிலிருந்து தமிழக அரசுக்கு எதிராக போராட்டத்தை நடத்துவது என்ற முடிவினை துணிச்சலாக மேற்கொண்டது, ஆசிரியர் அரசு ஊழியர் ஒற்றுமைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமானது, கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறிவரும் தமிழக அரசின் குனாம்சத்திற்கு எச்சரிக்கை செய்யும் விதத்திலும், உச்சபட்ச கோபத்தை தமிழ்நாடு அரசுக்கு உணர்த்துகின்ற வகையிலும், இலட்சக்கனக்கான அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்ற ஜாக்டோ-ஜியோ வரலாற்றில் புதிய அத்தியாயத்தை படைத்துள்ள போராட்டமாக நடைபெற்றுள்ளது.

மேற்கண்ட இரண்டு இயக்கங்களிலும் அனைத்து துறைகளிலும் புதியதாக பணியில் சேர்ந்துள்ள இளைஞர்கள் போராட்டங்களில் பங்கேற்றிருப்பதையும் ஊழியர்களிடம் உற்சாகத்தையும், ஒன்றுபட்டு போராடி நமது ஸ்தாபனத்தினால் மட்டுமே கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதை உணர்த்துகிறது.

**எனவே... தோழர்களே, போராட்டத்தில் பங்கேற்ற இளைஞர்களை துறைவாரியாக பட்டியலிட்டு தொடர்ச்சியாக இயக்கங்களில் பங்கேற்க செய்வதுடன், அவ்வூழியர்களை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டுவர வேண்டிய தலையாய ஸ்தாபன கடமையினை வட்ட மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டும்.**

- ஆசிரியர்

# மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும்! மார்ச் – 8 சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்கள்!

உலகம் முழுவதும் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பெண்கள் அனைவரும் கொண்டாடும் ஒரு சர்வதேச விழா. பெண்கள் பெண்களுக்காக கொண்டாடும் ஒரு மகிழ்ச்சியான நாள். மற்ற விழாக்கள், பண்டிகைகள், சிறப்பு தினங்கள் எல்லாம் மற்றவர்களுக்கு வேண்டுமானால் விழாவாக இருக்கலாம். ஆனால் பெண்கள் அடுப்படியில் வெந்து, அடுத்தவர்கள் சந்தோசத்திற்காக அது கணவனாக, தந்தையாக, அண்ணனாக, தம்பியாக, ஏதாவது ஒரு வகையில் ஆண்களின் சந்தோசத்திற்காக தன்னை தியாகப்படுத்திக்கொள்வதை சந்தோசமாக ஏற்றுக்கொள்பவள் பெண். ஏனென்றால் அதுதான் சந்தோசம் என காலம்காலமாக பெண்ணுக்கு சொல்லப்பட்டு வருகிறது. அதையே பெண் தோழர்களும் சுவீகரித்துக்கொள்கிறார்கள்.

பெண் குழந்தை பிறந்தது முதல் இந்த உலகம் பாரமாக பார்க்கப்படுகிறது. ஏன், பெண்ணாய் பிறப்பதே பாரமாக பார்க்கப்படுகிறது. இந்த சமூகத்தில் வளர்ச்சி என்று வந்தால் அந்த வளர்ச்சி பெண்களுக்கு கடைசி வாய்ப்பாக கிடைக்கிறது. உதாரணமாக குடும்பத்தில் வருமானம் அதிகரித்தால் முதலில் ஆண்மகனின் விருப்பங்கள் ஆடைகள், வாகனங்கள் (பைக்) நிறைவேற்றப்படுகின்றன. கடைசியாக பெண்ணின் விருப்பங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அந்த குடும்பங்களில் நெருக்கடி ஏற்பட்டால் முதலில் பாதிப்பிற்கு உள்ளாவது பெண் குழந்தைகளே. தந்தைக்கு வருமானம் குறைந்தால் முதலில் பெண் கல்வி பாதிக்கப்படுகிறது.

உலகம் முழுவதிலுமுள்ள பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தினத்தை அந்தந்த நாடுகளின் உழைக்கும் வர்க்கத்தின் வர்க்க உணர்வுள்ள, அரசியல் மற்றும் தொழிற்சங்க அமைப்புகளுடன் சேர்ந்து மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும். அதன் நோக்கம் பெண்களின் வாக்குரிமையை அடைவதாக இருக்க வேண்டும். பெண்களின் பிரச்சனைகளுடன் இணைந்து நடத்தப்பட வேண்டும். உலக அளவிலான பார்வையுடன் இருக்க வேண்டும். - கிளாரா ஜெட்கின். ஆகஸ்ட் 1910, டென்மார்க் கோபன்ஹெகனில் நடைபெற்ற சர்வதேச பெண்கள் மாநாட்டில் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம். பெண்களின் முன்முயற்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உழைக்கும் வர்க்க கண்ணோட்டத்தில் பிறந்தது மகளிர் தினம். இதன் முக்கிய நோக்கம் மனிதாபிமானமற்ற வேலை நிலைமைகளுக்கு எதிராகவும், பெண்களின் வாக்குரிமைக்காகவும், எட்டு மணி நேர வேலைக்காகவும் உருவாக்கப்பட்டது மகளிர் தினம். 1975 ஆம் ஆண்டுதான் ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொள்ளப்பட்டு உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், சர்வதேச மகளிர் தினத்தை அதன் தன்மையை, நோக்கத்தை, உருவாக்கத்தை மறைக்க திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வீட்டு உபயோகப்பொருட்கள், சேலைகள், சுடிதார்கள், அலங்காரப்பொருட்கள்

தள்ளுபடியில் வாங்குவதற்கும், பெண்களுக்கு

பரிசுப்பொருட்கள் வழங்குவதற்கும் இந்த மகளிர் தினத்தை ஒரு வியாபார தினமாக கொண்டாடப்படுகிறது. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், பாகுபாடுகள், ஓரளவிற்கு ஊடகங்களில் விவாதிக்கப்படுகின்றன. அவைகள் பெண்களுக்கு எதிரான ஏற்ற தாழ்வுகள், வன்முறை பிரச்சனைகளில் கவனம் செலுத்துகின்றன. ஆனால், பெண்களின் சமத்துவம் மற்றும் பெண் விடுதலையைப்பற்றி பேசவும், கேள்வி எழுப்பவும், விவாதிக்கவும் தயங்குகின்றன. புதிய தாராளமயக்கொள்கைகளின் விளைவாக சமூகம் மிக நெருக்கடியான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டுள்ள நிலையில் இந்த சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் அதே வேளையில் உழைப்புச்சுரண்டல் மற்றும்; பாலின பாகுபாடு பற்றி விவாதங்கள், இயக்கங்கள் மற்றும் போராட்டங்களை முன்னெடுத்துச்செல்வது மிகவும் அவசியம்.

பெண் என்பவள் ஆணை சார்ந்து வாழ்பவள், உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பலவீனமானவள் என்ற கருத்துக்களை சொல்லிச்சொல்லி மேலும் பெண்களை அடிமைப்படுத்தும், ஆணை அண்டிப்பிழைக்க வைக்கும் பழமைவாத கருத்துக்களை அம்பலப்படுத்திட வேண்டும். சொத்துக்களை தனியுடமைப்படுத்தவும், சொத்துக்களுக்கான வாரிசுகளை உத்தரவாதப்படுத்தவும் திருமணம் என்ற குடும்ப பந்தத்தில் ஆணுக்கு இல்லாத கற்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி பெண் பொன்விழங்கிடப்படுகிறாள். ஒரு இனப்பெருக்கத்திற்கான கருவியாக பயன்படுத்தப்படுகிறாள் அதுவும், ஊதியமில்லா உழைப்பாளியாக வெறும் அலங்கார வார்த்தைகளால் கொத்தடிமையாக்கப்படுகிறாள் என்ற உண்மையை இந்த சர்வதேச மகளிர் தினத்தில் உறக்கச்சொல்லவேண்டும்.

இதனால் பெண் என்பவள் சுயமாக வாழ்வதற்காக, வேலைக்குச்செல்வதை தடுக்கிறது. ஆனால், சமூகத்தில் நிறுவனங்கள் தங்கள் கொள்ளை இலாபத்திற்காக ஆண்களைவிட பெண்கள் குறைவாக உழைக்கிறாள் என்ற காரணத்தைக்கூறி பெண்களை குறைவான ஊதியத்தில், அதிகப்படியான வேலையை, உழைப்புச்சுரண்டலை தடையின்றி செய்கின்றது. பெண்களின் உழைப்பு குறைந்த கூலி என்பது மட்டுமல்லாமல் அதிகப்படியான கீழ்படிதலும் நிறுவனங்களுக்கும், பெருமுதலாளிகளுக்கும் மிகவும் விரும்பக்கூடியதாக உள்ளது என கிளாரா ஜெட்கின் கூறுகிறார்.

நம் நாட்டில் 80 சதவீதம் பெண்கள் ஊதியமின்றி வீட்டு வேலைகளைச்செய்துவருகிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியப்பெண்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் ஊதியமின்றி வேலை செய்கிறார்கள். வீட்டு வேலை மற்றும் வீட்டு பராமரிப்பு பணிகளுக்காக பெண்கள் ஊதியமின்றி வேலை செய்யும் மதிப்பு ஒரு ஆண்டிற்கு ரூ.22 லட்சம் கோடி என ஆய்வு மதிப்பிட்டுள்ளது. சத்துணவு, அங்கன்வாடி, ஆஷா, பொதுப்பணி திட்டப்பணியாளர்கள் செய்யும் உழைப்பின் மதிப்பு இன்னமும் கூடுதலாக இருக்கும். பெண்களின் தன்மையைப்பற்றி நமது சாஸ்திரங்களும், சம்பிரதாயக்கருத்துக்களும் இந்த பெரும் கொள்ளையை நியாயப்படுத்துகின்றது.

இந்தியாவில் உற்பத்தியில் பெண்

உழைப்பாளர்களின் பங்கேற்பு மிகவும் குறைவாக உள்ளது. இது கோவிட் மற்றும் தொற்றுநோய் காலங்களில் 16 சதவீதம் வரை மிகவும் குறைந்தது. அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் புள்ளிவிபரங்களின் படி 2017-18 முதல் 2021-22 வரை நிலையான ஊதியத்தில் பெண்களின் பணி நியமனம் 12 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறுகிறது. நகர்ப்புற மற்றும் கிராமப்புரங்களில் வீட்டு வேலை செய்யும் பெண்களை குடும்ப உதவியாளர்கள் என இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன்பிறகும் சுமார் 70 சதவீதம் பெண்கள் முறையான வேலை இல்லாமல் இருக்கிறார்கள். நாட்டில் பாலின வேறுபாடு அதிகமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

**கல்வி, வேலைவாய்ப்பு:**

தேசத்தில் மேல்நிலை மற்றும் கல்லூரி படித்த பெண்களில் 74.5 சதவீத பெண்கள் வேலைக்குச்செல்லாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியது. இதற்குக்காரணம் வேலைக்குச்சென்றால் வீட்டு வேலையை யார் செய்வது என்ற சிந்தனையும், நெருக்கடிகளும் காரணம். வேலைக்குச்செல்லாத பெண்களில் 44.5 சதவீதம் பெண்கள் குழந்தை பராமரிப்பு மற்றும் வீட்டு பொறுப்புக்களால் வேலைக்குச்செல்வதை தவிர்க்கிறார்கள். தற்போதைய சூழலில் பெண்கள் அதிகம் வேலைவாய்ப்பிற்கு வரவேண்டும் என கருத்தாக்கம் அதிகரிக்கிறது. காரணம் குறைந்த ஊதியத்தில், அதிகப்படியான வேலையை பெண்களிடம் பெறமுடியும் என்ற பெரு நிறுவனங்களின் பேராசையாகும். வேலைக்குச்செல்லும் பெண்கள் ஊதிமின்றி வீட்டு வேலையையும் கூடுதலாகச்செய்து, ஒரே நாளில் இரண்டு ஆட்களின் வேலையை செய்கிறார்கள்.

**பாலின சமத்துவம்:**

சர்வதேச மகளிர் தினத்தின் நோக்கமே கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் பிரதிநிதித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உலக பாலின இடைவெளி அறிக்கை 146 ஆண்டுகளில் மதிப்பீடு செய்ததில் தற்போது ஆண்-பெண் இடையேயான ஒப்பீடு 68.4 சதவீதம் எனவும், முழு பாலின் சமத்துவம் அடைய இன்னமும் 131 ஆண்டுகள் ஆகமென அதிர்ச்சியான தகவலை கூறுகிறது.

**அரசுப்பணிகளில் பெண்கள் நிலை:**

உத்தரப்பிரதேசத்தில் கடந்த 2021 தேர்தல் காலத்தில் தேர்தல் பணியில் ஈடுபட்ட 1621 ஆசிரியர்கள் கொரானா நோயின் பாதிப்பு ஏற்பட்டு இறந்து போனார்கள். பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்பட்டது. மாநில அரசு 2,50,000 ஆசிரியர்களை தேர்தல் பணிக்கு பயன்படுத்தியது. அம்மாநில ஆசிரியர் சங்கங்கள் தேர்தலை கொரானா பாதிப்பு அதிகம் இருப்பதால் தேர்தலை தள்ளி வைக்க கோரியது. அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில முதல்வர். யோகி ஆதித்யாநாத் மாநிலத்தில் தனக்குள்ள செல்வாக்கினை தெரிந்துகொள்ள விரும்பினார். எனவே, தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால், என்ன நடத்தது?

கல்யாணி என்ற 27 வயது பெண் ஆசிரியர் ஜான்பூர் மாவட்டத்தில் வேலை பார்த்துவந்தார். அவர் 8 மாத கர்ப்பிணியாக இருந்தார். தேர்தல் பணிக்கு வரவேண்டும் என ஏப்ரல் 9 ம் தேதி அன்று அவருக்கு உத்தரவு வழங்கப்பட்டது. அவர் உடல்நிலையை சொல்லி விடுப்பு விண்ணப்பம் கொடுத்தார். விண்ணப்பம்

ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர் ஏப்ரல் 14 அன்று தேர்தல் பயிற்சி வகுப்பிற்கு சென்றார். அங்கு தேர்தல் பணியில் ஈடுபட மறுக்கும் ஊழியர்கள் மீது வழக்கு தொடரப்படும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டது. ஆசிரியர் கல்யாணி தன் மோசமான உடல்நிலையுடன் ஏப்ரல் 15 அன்று தேர்தல் பணியாற்றினார். ஏப்ரல் 17 அன்று அவருக்கு தொற்று தெரியவந்தது. ஆக்சிஜன் அளவு மிகவும் குறைந்தது. மருத்துவமனை தேடி அலைந்து ஒரு வழியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி ஆசிரியர் கல்யாணி இறந்தார். இது கொலையின்றி வேறென்ன?

மற்றொரு சம்பவம், லாலன்குமார் மற்றும் அவரது மனைவி மீனாகுமாரி இருவரும் சித்தார்த் நகரில் ஆசிரியர்களாக பணிபுரிந்து வந்தனர். இருவரும் மேலே குறிப்பிட்ட கல்யாணியை போலவே ஏப்ரல் 11 அன்று தேர்தல் வகுப்பில் கலந்து கொண்டனர். ஏப்ரல் 17 அன்று லாலன்குமாரின்

உடல்நிலை மோசமானது அவர் டெஸ்ட் எடுத்தார். ரிசல்ட் நெகடிவ் என்று வந்தது. ஆனால் உடல்நிலை சரியாகவில்லை. ஏப்ரல் 18 முதல் மருத்துவமனைக்கு அலைந்தார். அவருடைய டெஸ்ட் ரிப்போர்ட் நெகடிவ் என்று இருந்ததால் மருத்துவமனையில் இடம் கிடைக்கவில்லை. ஏப்ரல் 23 அன்று மீண்டும் டெஸ்ட் எடுத்தார். தொற்று உறுதியானது. ஏப்ரல் 24 அன்று மருத்துவமனையில் அவருக்கு இடம் கிடைத்தது. ஆனால் பலனின்றி ஏப்ரல் 25 அன்று அவர் இறந்துபோனார். அவர் இறப்புக்கு பின்னால் கூட தேர்தல் பணியில் பங்கேற்கவில்லை என்று மாநில அரசு விளக்கம் அளிக்கவேண்டுமென மாநில கல்வித்துறை உத்தரவிட்டது. இது ஒருபுறம் இருக்க லாலன்குமார் மனைவி மீனாகுமாரியும் தொற்று ஏற்பட்டு சித்தார்த் நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவர் மே மாதம் 4ஆம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துபோனார். அவர் இறக்கும் போது அவர் கணவர் இறந்த செய்திகூட அவருக்கு தெரியாது. இந்த இரண்டு சம்பவங்களை பார்க்கும்போது ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை மாநில அரசுகள் எந்த வகையில் நடத்தப்படுகிறார்கள் என்பது புரியும்.

இந்த இரண்டு சம்பவங்களுக்கு பின்னால் உ.பி. ஆசிரியர் சங்கம் அந்த காலகட்டத்தில் மாநில பஞ்சாயத்து பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு தேர்தலில் பணியாற்றி கொரானா தொற்று ஏற்பட்டு இறந்துபோன 708 ஆசிரியர்களின் பட்டியலை அரசிடம் கொடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தது. இதற்காக சங்கம் உயர்நீதிமன்றம் நாடியது. தேர்தல் நடந்தாலும், வாக்கு எண்ணிக்கையில் நாங்கள் ஈடுபடமாட்டோம் என அறிவித்தது. ஆனால் மாநில அரசு தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி ஆசிரியர்கள் வாக்கு எண்ணிக்கைக்கு வரவழைக்கப்பட்டார்கள். 829 மையங்களில் வாக்கு எண்ணிக்கை பணி நடைபெற்றது. ஒவ்வொரு மையங்களிலும் சமூக இடைவெளி கொடுக்கப்பட்டு 75 பேர்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்ற உத்தரவு கடைபிடிக்கப்படாததால், நிலமை எல்லை மீறியது. வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன் ஆசிரியர்களுக்கு தொற்று ஏற்பட்டு 1621 ஆசிரியர்கள் தொற்று ஏற்பட்டு இறந்துபோனார்கள். மாநில அரசு ஒரு இரங்கல் கூட தெரிவிக்கவில்லை.

மேலும் தேர்தல் ஆணையத்தில் 3 ஆசிரியர்கள் மட்டுமே இறந்து போனதாக அறிவித்தது. அலகாபாத் உயர்நீதிமன்றம் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 1 கோடி இழப்பீடு வழங்க உத்தரவிட்டது. ஆனால் உ.பி. அரசு 30 இலட்சம் மட்டுமே வழங்கியது. ஆனால், ஆசியர் சங்க தலைவர் தினேஷ் சந்திர சர்மா ஆசிரியர்களுக்கு சங்கத்தின் சார்பாக 76 கோடி ரூபாய் வழங்கியதாக கூறினார். கொரானா காலகட்டத்தினால் நடத்தப்பட்ட பஞ்சாயத்து தேர்தலினால் 1621 ஆசிரியர் குடும்பங்கள் நாசமாகிவிட்டது.

**சம வேலைக்கு, சம ஊதியம்?**

இந்திய அரசியலமைப்புச்சட்டம் ஆண்கள், பெண்கள் பாலின வேறுபாடின்றி சம உரிமைகளோடு சமத்துவமாக வாழ வேண்டும் என சொல்லுகிறது. இந்தியாவில் பணியிடங்களில் பெண்களின் பாகுபாடு உலகின் மிக உயர்ந்த ஊதிய ஏற்றதாழ்வுகளில் ஒன்றாக தொடர்கிறது. இந்தியப் பெண்கள் ஆண்களைப் போல சம வேலைக்கு 40 சதவீதம் மட்டுமே ஊதியம் பெறுகிறார்கள். அரசு அலுவலகங்களில் சம ஊதியம் வழங்கப்பட்டாலும், கூடுதல் பணி என்பது பெண் ஊழியர்களுக்கே அதிகம் வழங்கப்படுகிறது. அதற்கு பெண்கள் பொறுப்பாக வேலை செய்வார்கள் என்று வியாக்கியானம் சொல்லப்படுகிறது. அரசின் புள்ளிவிபரங்களின்படி உழைக்கும் பெண்களில் 31 சதவீதம் பெண்கள் மட்டுமே மகப்பேறு விடுப்பு பெறுகிறார்கள். பெண் ஊழியர்களுக்கு அல்லது மாணவிகளுக்கு மாதவிடாய் விடுப்பு வழங்கப்படுவதில்லை. பெண்களுக்கான தனி கழிப்பறைகள் சில பொதுத்துறை நிறுவனங்களில் கூட இல்லை. நீண்ட நேர வேலை மற்றும் அடைய முடியாத இலக்கு போன்றவற்றால் குறிப்பாக ஐவு துறையில் பணிபுரியும் பெண்கள் நிலை மிகவும் மோசமாக பாதிப்பிற்குள்ளாகிறது. புனேவில் ஒரு இளம்பெண் வேலை அழுத்தத்தால் இறந்துபோனார். வீட்டிலிருந்து வேலை என்பது 24 ஒ 7 வேலைகளை செய்ய பயன்படுத்தப்படுகிறது. பெண்களுக்கான இரவுப்பணி மீதான கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்கான விதிகள் போன்ற பாதுகாப்பு சட்டங்கள் குறைக்கப்படுகின்றன. சமவேலைக்கு சம ஊதியம், மகப்பேறு சலுகைகள் போன்றவை தொழிலாளர் சட்டங்களில் உள்ளது. ஆனால் அவை பெரும்பாலும் மீறப்படுகின்றன.

**வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள்:**

இந்தியாவில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்;கு எதிரான வன்முறைகள் ஆபத்தான அளவில் உள்ளன. இந்தியாவில் சராசரியாக ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒரு கற்பழிப்பு பதிவாகியுள்ளது. அவர்களில் 15 சதவீதம் சிறார்கள். 2022 ஆம் ஆண்டில் நம்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஒருமணி நேரத்திற்கு 51 எப்.ஐ.ஆர்கள் பதிவாகியுள்ளன. இது இப்போது அதிகரித்துள்ளது. நிர்பயா வன்கொடுமை, மத்திய பிரதேச மாநிலத்தில் 12 வயது சிறுமி "என்னை காப்பாற்றுங்கள்" என அலறல் சத்தம் யாருக்கும் கேட்கவில்லை.

பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தடுப்புச்சட்டம் 2013 இல் இயற்றப்பட்டாலும். இது மிகக்குறைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களில் ஒன்றாகும். பெரும்பாலான அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் கூட விசாகா

கமிட்டிகள் அமைக்கப்படுவதில்லை. அவ்வாறு அமைக்கப்பட்ட இடங்களில் முறையாக செயல்படுவதில்லை. 2023 ஆம் ஆண்டில் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல்கள் 31 சதவீதம் அதிகரித்துள்ளது. அனைத்து துறைகளிலும் உள்ள பெண்கள், அமைப்புசாரா, அமைப்புசார்ந்த, பொது மற்றும் தனியார் மற்றும் பல்வேறு அரசுத்துறைகளில் பணிபுரியும் திட்டப்பணியார்கள் பாலியல் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். ஆனால், பெரும்பாலான வழக்குகள் பதிவு செய்யப்படுவதில்லை. ஐடி, கட்டுமானம் போன்ற சில தொழில்களில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகமாக உள்ளது. கிராமப்புறங்களில் விவசாயத்துறையில் பணிபுரியும் பெண்களும் பாலியல்துன்புறுத்தல் மற்றும் வன்முறையை எதிர்கொள்கின்றனர். வர்மா கமிட்டி சுட்டிக்காட்டியபடி முறையான கழிப்பறை வசதி இல்லாததால் இருளில் வெளியே செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ள பெண்கள் பாலியல் வன்கொடுமைகளை எதிர்கொள்கின்றனர்.

2024ல் பெண் கொலைகள் பற்றிய ஐ.நா. வின் அறிக்கை உலகில் பெண்களுக்கு மிகக் கொடிய இடம் அவர்களின் வீடு என்று கூறுகிறது. உலகம் முழுவதும் 140 பெண்கள் தங்கள் நெருங்கிய துணை அல்லது நெருங்கிய உறவினரால் தினமும் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தியாவில் பெண்கள் மீதான பலாத்காரங்களில் 89 சதவீதம் அந்த பாதிக்கப்பட்ட பெண்களின் தெரிந்த நபர்களால் அல்லது குடும்பத்;தை சேர்ந்த நபர்களால் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள்.

மூன்றில் ஒரு பங்கு பெண்கள் குடும்ப வன்முறையை அனுபவிக்கின்றார்கள். ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கும் ஒரு இளம் திருமணமான பெண் நம் நாட்டில் அடித்துக்கொல்லப்படுகிறாள், எரிக்கப்படுகிறாள். அல்லது தற்கொலைக்கு தள்ளப்படுகிறாள். 2021 ஆம் ஆண்டில் கணவன் அல்லது அவரது உறவினரால் கொடுமைப்படுத்தப்பட்ட வழக்குகளில் ஒரு நாளைக்கு சுமார் 372 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நம் நாட்டில் பெண் சிசுக்கொலைகள் மிக அதிகமாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஐந்து லட்சம் பெண் குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே கொல்லப்படுகின்றனர்.

குடும்பம் என்பது வேலையில் சுரண்டப்படும் இடமாக மட்டும் இல்லாமல் பெண்கள் தீவிர வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களை சந்திக்கும் இடமாகவும் உள்ளது. நவதாராளவாத நுகர்வுக்கலாச்சாரத்துடன் இணைந்த ஆணாதிக்க விழுமியங்கள் குடும்பத்திலும், சமூகத்திலும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு தீவிர விரோதமான சூழ்நிலைகளை உருவாக்குகிறது.

**கார்ப்பரேட் வலையில் பெண்கள்:**

கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அனைத்தும் மூலதனம், அனைத்தும் வியாபாரம் என உலகச்சந்தைகள் இந்தியாவில் தங்கு தடையற்று நுழைந்தது. ஆடு வளர்ப்பவனை நம்பாது வெட்டுபவனைத்தான் நம்பும் என்பதைப்போல மக்கள் கார்ப்பரேட்டுகளின் வலைக்குள் தானாக பொய் விழுந்தனர். அதற்கு மிகப்பெரிய உதாரணம் உலக அழகிப்பட்டம். 1994 ஆம் ஆண்டு உலக அழகி Miss World ஆக ஐஸ்வர்யா ராய் தேர்வு

செய்யப்பட்டார். அது இந்தியாவில் மிகப்பெரிய பேசுபொருளாக ஆனது. அதன்பிறகு சுஷ்மிதா சென், லாராதத்தா என உலக அழகிகள் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இது திட்டமிட்ட வியாபாரக்கொள்ளை என்பதை அப்போது யாரும் அறியவில்லை. அதற்கு முன்பு மாநிலத் தலைநகரங்களில் இருந்த அழகுசாதனக் கூடங்கள் (Beauty Porlour)கள் குக்கிராமங்களிலும் இன்று விரியத்துவங்கியது. வீட்டில் நிலைக்கண்ணாடியும், சீப்பும், PONDS POWDER மட்டுமே இருந்த அழகு சாதனப்பொருட்கள் இன்று பெண்கள் உழைப்பின் மூலம் சம்பாதிக்கும் ஊதியத்தில் அதிகம் செலவு செய்யும் பிரதான அம்சமாக மாறி உள்ளது. மிகப்பெரிய கார்பரேட் கொள்ளையாக நடைபெறுகிறது.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு காரணம் பெண்களை ஒரு போகப்பொருளாக கார்ப்பரேட் விளம்பரங்கள் பயன்படுத்துவதுதான். ஒரு ஆண் அணியும் உள்ளாடைக்கு பெண்களை விளம்பர மாடலாக பயன்படுத்தப்படுகின்றது. பெண்களை அழகு பொருளாக மட்டும் பார்க்க இந்த வியாபார உலகம் கற்றுக்கொடுக்கிறது. பெண்களை மென்மையானவள் என சொல்லிச்சொல்லி அவளிடம் மீதமிருக்கும் பலத்தையும் பறித்துவருகிறது. அவர்களிடம் மல்லேஸ்வரியையும், மேரிகோமையும், கீதாபோகாட், ஷாக்ஷி மாலிக், வினேஸ்போகாட், பபிதாகுமாரி, திவ்யாகாக்ரன், நிஷாதஹியா, பூஜாதண்டா, அல்காதோமர் போன்றவர்களை உதாரணமாக காட்டவேண்டும். இந்த உலகம் கண்ட சமூகங்களிலேயே சிறந்த சமூகமாக தாய்வழிச்சமூகத்தில் பெண்ணே ஆதிக்க சக்தியாக இருந்தாள். நிலவுடமை வந்தவுடன் தான் சேர்த்துவைக்கும் சொத்து தனது வாரிசுக்கு செல்லவேண்டும் என நினைத்தவுடன். அதற்கு ஆதாரமான பெண்ணை அடிமையாக்க ஆணாதிக்க சிந்தனையில் உதித்த வார்த்தைகள்தான் கற்பு, பூமாதேவி, மென்யானவள், அழகுதேவதை, போன்ற பசப்பு வார்த்தைகள். அதன் உச்சபட்ச நிலைதான் உடன்கட்டை ஏறுதல், தேவதாசி முறைகள், பொட்டுகட்டிவிடுதல், வீட்டில் பூட்டிவைத்தல், மொட்டையடிக்கவைத்தல், கல்வியிலிருந்து தள்ளிவைத்தது, பெண்ணை ஒரு உயிராக் பார்க்காமல், ஒரு பொருளாக மாற்றியது. இவைகளை உடைக்க பல்வேறு சிந்தனையாளர்கள், சமூகவாதிகள், சீர்திருத்தவாதிகள், முற்போக்கு பகுத்தறிவாளர்கள் என பலநூறு ஆண்டுகளாக போராடி கொஞ்சம், கொஞ்சமாக விடுதலை பெற்றுவரும்போது தற்போதைய மதவாத சிந்தனைகளும், சனாதன கருத்துக்களும் மீண்டும் பெண்ணை சமூகத்தின் அடிமையாக கொண்டுசெல்ல பார்க்கிறார்கள். அவற்றிலிருந்து மீள இந்த சர்வதேச மகளிர் தினத்தில் பெண்கள் உறுதியேற்க வேண்டும்.

பெண்கள் உலக அளவிலான உற்பத்தியில் பெரும்பங்காற்றினால் மட்டுமே பெண் விடுதலை சாத்தியமாகும். பெண் அவளது நேரத்தில் ஒரு சிறிய அளவை மட்டுமே வீட்டு வேலையை எடுத்துக்கொள்ளும்.
- **பிரட்சிக் ஏங்கெல்ஸ்.**

பெண்விடுதலை என்பது வேறொன்றுமில்லை, பெண்ணின் கையிலிருக்கும் சமையல் கரண்டியை பிடுங்கிவிட்டு, அவள் கையில் புத்தகத்தை கொடுப்பதே! -தந்தை பெரியார் ●

கட்டுரை

# இது காலத்தின் கட்டாயம்

**- மு.அன்பரசு**

11.1.2025 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றாக புதிய ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று அறிவித்தது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நெஞ்சில் பதற்றத்தையும் கோபக்கனலையும் ஏற்படுத்தியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2018 ஆம் ஆண்டில் ethir எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நிலுவை உரிமைகளையும், நிறுத்திவைக்கப்பட்ட சலுகைகளையும் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த அதிமுக அரசை உடனடியாக வழங்க கேட்டு நாள்தோறும் வீர முழக்கமிட்டுக் கொண்டும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டு, அப்போதைய ஆளும் கட்சியை இடைவிடாமல் எதிர்த்துப் பேசினார். ஆனால் 2021ல் ஆட்சிக்கு வந்தபின் தான் சொன்ன வாக்குறுதிகளில் ஒன்றை கூட நிறைவேற்றாமல் சென்ற வருடம் வரை பல்வேறு சாக்குபோக்குகளை சொல்லிக் கொண்டிருந்தார். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றும் என அசையா நம்பிக்கை வாக்குறுதி அளித்திருந்த அவர்தான், ஆட்சிக்கு வந்த பிறகு நிதி ஆதாரம் மேம்பட்டதும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு செய்ய வேண்டியவை என் நினைவில் உள்ளது உங்கள் கோரிக்கைகளை மறுக்கவும் இல்லை மறைக்கவும் இல்லை மறக்கவும் இல்லை என்று பேசி அவரை நம்பியிருந்த அரசு ஊழியர்கள் ஆசிரியர் களை வேறு எதுவும் பேச முடியாதபடி தர்மசங்கடத்தில் ஆழ்த்தினார். அதன் பிறகும் முதல்வரிடமிருந்து எவ்வித அசைவும் இல்லாத நிலையில் போராட்டத்திற்கு ஆயத்தமானபோது "உங்களுக்கு நான் செய்யாமல் வேறு யார் செய்யப்போகிறார்கள் பொறுத்திருங்கள்" என்று அரசு ஊழியர்களின் எதிர்பார்ப்பிற்கு அணை போட்டார். அதன் காரணமாக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தாங்கள் முன்வைத்த பல உக்கிரமான போராட்டங்களை முதல்வரின் வார்த்தைகளின் பேரில் வைத்திருந்த வலுவான நம்பிக்கைகள் காரணமாக முன்னெடுத்துச் செல்லாமல் கைவிட நேர்ந்தது. திமுக தலைவர் திரு மு க ஸ்டாலின் அவர்கள் கொடுத்த வாக்குறுதி களிலேயே மிகவும் முக்கியமானது, "நான் ஆட்சிக்கு வந்ததும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவேன்" என்பது தான் ஆனால் 11.1.2025ஆம் தேதி நிதியமைச்சர் திரு தங்கம்தென்னரசு அவர்களின் சட்டமன்ற உரை முதல்வர் திரு மு க ஸ்டாலின் அவர்கள் கொடுத்த உறுதிமொழி என்பது உண்மையான உறுதி மொழி அல்ல அது நயவஞ்சக நம்பிக்கை துரோகம் என ஒவ்வொரு ஆசிரியரும் அரசு ஊழியருக்கும் புரிய வைத்துள்ளது.

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் தலைமைச் செயலக சங்கம் போன்றவை, இது எத்தகைய நம்பிக்கை துரோகம் என்பதை சுட்டிக்காட்டி அறிக்கைகள் விடுத்தபின், போராட்டங்கள் நடத்திய பின், பெரும் போராட்ட அறிவிப்புகளுக்கு ஆயத்தமாகி வரும்நிலையில் 4.2.2025 ஆம் தேதி அரசு தரப்பில் ஒரு செய்தி வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. அதில் பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை தரவும், பரிந்துரைக்கும் மூன்று அதிகாரி தலைமையில் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் குழு தன் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பானது தமிழக முதல்வர் திரு மு க ஸ்டாலின் அவர்கள், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு

எத்தகையதொரு நம்பிக்கை துரோகத்தை அவர்களின் இத்தனை வருட பொறுமை யான காத்திருப்பிற்குப் பின்னர் பரிசாக வழங்கியிருக்கிறார் என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அரியணையில் அவர் அமர அயராது உழைத்த அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் முதுகில் குத்தும் துரோகம் தான் இந்த மூவர் குழு அமைப்பு என்பதை அடிப்படை பணிபுரியும் அரசு ஊழியர் கூட நன்கு அறிவார். திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐஏஎஸ் அதிகாரியல ஒரு நபர் கமிட்டி ஆக போட்டு செல்வி ஜெயலலிதா அம்மையார் அரசு ஊழியர்களுக்கு தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதி எப்படி நிறைவேற்றினார் என்ற அனுபவம் ஏற்கனவே அரசு ஊழியர்களுக்கு உள்ளது.

மூன்று மாத கால அவகாசம் மட்டுமே கொடுத்து ஜெயலலிதா அம்மையார் போட்ட ஒரு நபர் கமிட்டியின் காலக்கெடு சுமார் 12 முறைக்கும் மேலாக நீட்டிக்கப்பட்டு பிறகு அது நீட்டிக்க படாமலேயே விடப்பட்ட வரலாற்றை கடந்து வந்த அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு இந்த ஒன்பது மாத கால அவகாசம் எத்தனை பெரிய ஏமாற்று வேலை என்பதை சொல்லிப் புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை. தமிழக முதல்வர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2003இல் ஜெயலலிதா அம்மையார் நினைத்தாரே அதேபோல் இப்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் வாக்குகள் தன் கட்சி க்குத் தேவையில்லை என்பதை முடிவு செய்து விட்டார் என்பது இதன் மூலம் தெள்ளத் தெளிவாகி இருக்கிறது. இனிமேலும் நம்முடைய முதுகில் குத்தும் அரசியல் நயவஞ்சகங்களை புறந்தள்ளி, கடந்த 22 ஆண்டுகளாக பழைய ஓய்வூதிய திட்டத்திற்காக போராடி வரும் இயக்கங்கள் ஒன்று திரண்டு போராட்டங்களை கையில் எடுத்து நம்பிக்கை துரோகங்களை வென்று காட்டிட வீறுகொண்டு எழுவதைத் தவிர வேறு வழியில்லை தோழர்களே. அமைக்கப்பட்டிருக்கும் மூவர் குழுவின் அறிக்கை என்ன சொல்லும் என்பதற்காக நாம் 9 மாதம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. பரிசீலனை என்ற பெயரில் எந்த அரசாங்கமும் அமைத்த எந்த குழுவின் அறிக்கையும் இதுவரை அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான உரிமைகளை தந்ததில்லை என்பதே நிதர்சனம். இதை அறிய நாம் ஒன்பது மாதம் காத்திருக்க வேண்டியதில்லை.

எனவே உடனடியாக தமிழக முதல்வர் அவர்கள் பரிசீலனைக் குழு அமைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை ஏமாற்ற பார்க்கும் இன்னொரு நம்பிக்கை துரோகத்தை தயவுசெய்து கைவிட்டு அந்த குழுவை ரத்து செய்து விட்டு திறந்த மனதுடன் சங்க தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து அரசு ஊழியர்களின் ஆசிரியருக்கு உரித்தான உரிமைகளை தர முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் வாக்குகள் வேண்டாம் என்று புறக்கணித்த அரசாங்கங்களின் வரலாற்றை, நம்பிக்கை துரோகம் செய்தவர்கள் கூடியவிரைவில் பொறுமையாக வீட்டில் அமர்ந்து படிக்க வைப்போம். நம்மை தூங்க விடாமல் செய்தவர்களுக்கு நிரந்தர ஓய்வு அளிப்போம். பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தும் அரசியல் அதிகாரத்தை வளர்த்தெடுப்போம். பொய்யுரைத்து ஆட்சி அமைத்து நம்பிக்கை துரோகம் செய்த பெரிய மனிதர்களின் முகமூடிகளை கிழித்தெறிவோம்.

ஒவ்வொரு அரசு ஊழியரும் ஆசிரியரும் நமது உரிமைகளை மீட்க நம்முடைய கரங்களிலிருந்து தட்டிப் பறிக்கப்பட்ட உரிமைகளை முட்டிமோதி போராடி வெற்றிக்கனி பறிக்கும் போராட்டங்களை வடிவமைப்போம். போராட்டங்கள் நமக்கு புதிதல்ல, போராட்ட களமும் புதிதல்ல, போராட நாம் அனைவரும் பெருந்திரளாய் அணிவகுத்து உரிமைகளை நாம் மீட்ட பின்னரே நமது பாசறைக்கு திரும்புவோம் என்ற சத்திய பிரமாணத்தினை எடுப்போம். உயரட்டும் நம் கொடிகள், தெறிக்கட்டும் முழக்கங்கள், அ திரட்டும் கோட்டை கொத்தளங்கள்; நம் நிர்ப்பந்தங்களால் விடியட்டும் கருப்பு இரவுகள். எல்லோருக்குமான நம்பிக்கை கதவுகளை திறந்தவர்களாக நாம் இருப்போம்.

அறத்துடன், மறத்துடன், போராளி என்ற நிறத்துடன், நம் உரிமைகளை மீட்டெடுக்க ஒன்றிணைவோம். இது காலத்தின் கட்டாயம். ●

ஜாக்டோ
ஜியோ

# ஜாக்டோ - ஜியோ (JACTTO - GEO)

(Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation)

தொடர்பு முகவரி: நெ. 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 05
போன்: 28441286 Email: jacttogeoconference@gmail.com

நாள்: 24.02.2025

பெறுநர்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தலைமைச்செயலகம்,
சென்னை - 600 009

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு,

ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் - அரசுப்பணியாளர்கள் என அனைத்து அரசுத்துறைகளில் பணியாற்றும் சுமார் 10 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஜாக்டோ-ஜியோ இயக்கத்தின் சார்பில் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்களை மக்களுக்கு முழுமையாக கொண்டு செல்லும் அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள் மற்றும் வருங்கால சமுதாயம் வளமான சமுதாயமாக உருவாக்கும் பணியை செய்துகொண்டிருக்கும் ஆசிரியர்கள் என தமிழ்நாட்டை தேச அளவில் முதன்மை மாநிலமாக உயர்த்திட அரும்பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். ஆனால், எங்களது வாழ்வாதார கோரிக்கைக்காக கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறோம்.

கடந்த ஆட்சியில் பத்தாண்டுகளாக எங்களது கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும், பரிசீலிக்கப்படாமல் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டோம். அதனால் கடந்த ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தோம். கடந்த ஆட்சி எங்களது கோரிக்கைகளை பொருட்டாக மதிக்காமல், எங்களது முறையீடுகளை பெற சங்க நிர்வாகிகளை நேரில் சந்திக்கவும் மறுத்தது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப்பணியாளர்களைப்பற்றி, எங்களது கோரிக்கைகளைப்பற்றி மக்களிடம் மிகவும் ஏளனமாகப்பேசிவந்தார்கள். இந்நிலையில் போராடும் எங்களுக்கு ஆதரவாக அன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவராக இருந்தபோதே போராட்டக்களத்திற்கு தாங்கள் நேரில் வந்து, போராடும் எங்களுக்கு ஆறுதல் கூறியதோடு, எங்களது கோரிக்கைகளை உணர்ந்தவராக, எங்களது கோரிக்கைகளின் நியாயத்தை புரிந்தவராக எங்களுக்கு ஆறுதல் கூறியதோடு, **கழக ஆட்சி வந்தவுடன் எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றிவைக்கப்படும்** என வாக்குறுதி அளித்தது மட்டுமின்றி கடந்த 2021ஆம் ஆண்டு தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் வாக்குறுதிப்பட்டியலில் வரிசை எண் **"309ல் புதிய ஓய்வூதியத்திட்டம் கைவிடப்பட்டு** பழைய **ஓய்வூதியத்திட்டம் மீண்டும்**

நடைமுறைக்கு கொண்டுவரப்படும்" உள்ளிட்ட வரிசை எண் 318 வரை எங்களது கோரிக்கைகள் வரிசைப்படுத்தி நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களிலும் மேற்கண்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்துப்பேசினார். இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களது நீண்ட நாள் கோரிக்கை கண்டிப்பாக நிறைவேறும் என அளவற்ற நம்பிக்கையோடு கழக ஆட்சி வருவதற்கு மிகுந்த ஆர்வத்துடன் ஆதரவளித்தனர்.

நாங்கள் எதிர்பாத்தபடி தாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்றீர்கள். தாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என ஆவலோடு எதிர்பாத்திருந்தோம். நெருக்கடியான கொரானா காலகட்டத்தில் கடமையை உணர்ந்து அமைதிகாத்தோம், நான் கொடுத்த வாக்குறுதியை மறைக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை, மறக்கவும் இல்லை என தாங்கள் நம்பிக்கை அளித்தீர்கள். அதன்பிறகு நிதிநிலை சரியானபின்பு கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என அறிவிப்பை நம்பினோம், முதலமைச்சர் நமது கோரிக்கைகளை அறிவிப்பார் என இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப்பணியாளர்கள் திரளாக பங்கேற்ற ஜாக்டோ-ஜியோ வாழ்வாதார கோரிக்கை மாநாட்டில் **"சொன்னவை அனைத்தும் நினைவில் உள்ளது. நிச்சயம் அவைகள் நிறைவேற்றப்படும்."** என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் வாக்குறுதி அளித்ததை ஏமாற்றத்தோடு ஏற்று காத்திருந்தோம். ஆனால் இன்றுவரை எங்களின் வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றாமல் தாமதித்து வருவது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக கருதுகிறோம். கடந்த ஆண்டு 13.02.2024 அன்று அமைச்சர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது விரைவில் எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என நம்பினோம். அந்த நம்பிக்கையோடு பாராளுமன்ற தேர்தலின்போது இன்றை ஆட்சி முழு வெற்றி பெற்றிட வேண்டும் என நம்பிக்கையோடு பணியாற்றினோம்.

ஆனால், கடந்த 13.02.2024 அன்று நடைபெற்ற நடைபெற்ற பேச்சுவார்த்தை இன்றுவரை அமுல்படுத்தப்படாததும், பழைய பென்சன் திட்டத்தை இந்த அரசு அமுல்படுத்தும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் கடந்த 11.01.2025 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசு அமுல்படுத்தியுள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்தை அதன் வழிகாட்டு

நெறிமுறைகள் பெற்று ஆய்வு செய்யப்படும் என அறிவித்தது மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளாக எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப்பணியாளர்கள் கொந்தளிப்பானதொடு சூழ்நிலையில் போராட்டக்களத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

**போராட்ட திட்டமிடல்கள்**

- 14.02.2025அன்று தமிழ்நாடு முழுவதும் வட்ட அளவில் மிக எழுச்சியாக ஆர்ப்பாட்டம் நடத்தி முடிக்கப்பட்டது.
- 25.02.2025 (நாளை) மாவட்டத்தலைநகரில் மறியல் போராட்டம்.

ஒவ்வொரு முறையும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பொறுமை இழக்கும் போதும் இந்த ஆட்சி கட்டாயம் தனது வாக்குறுதியை நிறைவேற்றும் என ஆறுதல் படுத்தினோம். ஆனால், எங்களால் இதற்குமேல் அமைதிப்படுத்த இயலவில்லை. மேலும், இந்த ஆட்சியின் மீது உள்ள எங்களது நம்பிக்கையை எதிர்க்கட்சிகள் ஏளனமாக பேசும் நிலை உருவாகியுள்ளது. எங்களது பொறுமைகளுக்கு மதிப்பளிக்காத நிலையில் தங்களின் மேல் உள்ள நம்பிக்கையை மேலும் காலதாமதப்படுத்தாமல் கீழ்கண்ட எங்களது நியாயமான, வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இப்போதும் எங்களை நேரில் அழைத்துள்ளது எங்களது கோரிக்கைகளில் முக்கியமான பழைய ஓய்வூதியம், சரண்விடுப்பு, காலமுறை ஊதியம் உள்ளிட்ட முக்கியமான கோரிக்கைகளையாவது நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்கள் நெஞ்சத்தில் நிறைந்துள்ளது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்கண்ட எங்களது நியாயமான கோரிக்கைகளான, தேர்தல் காலத்தில் நிறைவேற்றுவதாக தாங்கள் அறிவித்த கீழ்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து நல்ல முடிவினை அறிவிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். இயலாத பட்சத்தில் நாங்கள் போராட்டங்களை முன்னெடுத்துச்செல்வதை தவிர்க்க இயலாத நிலையில் உள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**கோரிக்கைகள்**

- 01.04.2003-க்குப்பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத்திட்டத்தினை அமல்படுத்திட வேண்டும்.
- காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.

தொடர்பு முகவரி: நெ. 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 05
போன்: 28441286 Email: jacttogeoconference@gmail.com

- இடைநிலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டுவரும் அநீதி களையப்பட வேண்டும்.
- தொடக்க கல்வித்துறையில் பணிபுரியும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக் கல்வித்துறை அரசாணை எண்.243 நாள்: 21.12.2023ஐ உடனடியாக ரத்து செய்திட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச்செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணரியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழிற்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், ஆகியோருக்கான ஊதிய முரண்பாட்டினைக் களைய வேண்டும். கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள ஊதிய முரண்பாட்டினைக் களைய வேண்டும். கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (CAS) ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய்கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப்பணியாளர்கள், தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றும் MRB செவிலியர்கள், தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் COE & PPP பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட வேண்டும்.
- அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- 21 மாத ஊதியமாற்று நிலுவைத் தொகை அரசு ஊழியர் - ஆசிரியர்கள் - அரசுப்பணியாளர்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுவருவதை உடனடியாக வழங்கிட வேண்டும்.

# ஜாக்டோ - ஜியோ (JACTTO - GEO)

(Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation)



தொடர்பு முகவரி: நெ. 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 05

போன்: 28441286 Email: jacttogeoconference@gmail.com


- 2002 முதல் 2005 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்களின் பணிக்காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள்முதல் பணிவரன்முறைப்படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்.
- சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்திட வேண்டும்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் இன்று (24.02.2025) தலைமைச்செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்கள் அடங்கிய ஒரு குழுவினை அமைத்து ஆணையிட்டுள்ளார்.

இந்தக்குழுவில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோருக்கு கோரிக்கைகள் குறித்த அளித்த கடித நகல்.



கட்டுரை

# யாரிடம் பறித்து யாருக்கு? பட்ஜெட் ரகசியம்!

– க. சுவாமிநாதன்

12 லட்சம் வரை வருமான வரிச்சலுகை என்பது நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1, 2025 அன்று சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டின் அறிவிப்புகளில் ஒன்று. ஆகவே இது "நடுத்தர வர்க்க பட்ஜெட்" என்று பலராலும் பேசப்படுகிறது. உண்மையில் நடுத்தர வர்க்க மக்களின் நலனுக்காக செய்யப்பட்டதா? இது பொருளாதாரத்தில் கிராக்கியை உருவாக்கி பொருளாதார மந்தத்திற்கு தீர்வு காணுமா? இந்த சலுகை வழங்கப்படுவதற்கான வருவாய் யாரிடமிருந்து திரட்டப்பட்டுள்ளது? வருவாய் திரட்டலில் அரசு கடைப்பிடித்துள்ள வழிமுறை சமூகத்தில் என்ன விளைவுகளை உருவாக்கும்? என்றெல்லாம் உரையாடுகிற ஒரு அருமையான கட்டுரையை பிரபாத் பட்நாயக் எழுதி இருக்கிறார்.

### கேள்வி என்ன?

விடுதலைக்கு பிந்தைய இந்தியாவின் பட்ஜெட்டுகளில் மிக மோசமான, கோடானுகோடி எளிய மக்களுக்கு எந்த நம்பிக்கையும் தராத ஒன்றாக இது அமைந்திருக்கிறது. அதே நேரத்தில் 12 லட்சம் ரூபாய் வரை வருமான வரிச்சலுகை என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் உரையின் துவக்கத்திலேயே நடுத்தர வர்க்கத்தினரின் கைகளில் அதிகமான பணப்புழக்கத்தை இந்த பட்ஜெட் ஏற்படுத்தும் என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். நடுத்தர வர்க்கத்தினருக்கு இந்த சலுகை வழங்கப்படுவதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. பண வீக்கத்தின் தாக்குதலை இவர்களும் எதிர்கொள்பவர்கள் என்பதால் நிவாரணம் பெறத்தக்கவர்களே! ஆனால் இந்தச் சலுகை வழங்கப்படுவதற்கான வருவாய் எங்கே இருந்து திரட்டப்பட்டது? அல்லது எந்தச் செலவினம் இதற்காக வெட்டப்பட்டது என்பதே ஆய்வுக்குரியது.

இந்த பட்ஜெட் நடுத்தர வர்க்க நுகர்வை அதிகரித்து ஒட்டுமொத்த நுகர்வையும் அதிகரிக்கும் என்பதே அரசின் உடனடி இலக்கு. நடுத்தர வர்க்கத்தினருக்கு இந்த சலுகையை வழங்குவதற்கான வருவாய் எப்படி திரட்டப்பட்டு இருக்கிறது என்பதைப் பொருத்தே ஒட்டு மொத்த நுகர்வு அதிகரிக்கும் என்பது பொருளாதாரத்தின் எளிமையான உண்மை. நடுத்தர வர்க்கத்தை விட எளியவர்களாக உள்ளவர்கள் கைகளில் இருப்பதை பறித்து, இவர்களுக்கு தரப்பட்டால் எப்படி ஒட்டு மொத்த நுகர்வு அதிகரிக்கும் என்ற கேள்வியே இந்த பட்ஜெட்டை ஆய்வு செய்யும் போது ஏற்படுகிறது.

### யாரிடம் இருந்து பறிப்பு?

ஒன்றிய அரசின் செலவினம் 2024 - 25 திருத்திய மதிப்பீட்டை விட 7.4 சதவீதம் அதிகரிக்குமென பட்ஜெட் கூறுகிறது. ஆனால் இது பெயரளவிலான உயர்வே ஆகும். பண வீக்கத்தை கணக்கு போட்டால் இது உண்மையான உயர்வு அல்ல என்பதே. இன்னும் சொல்லப் போனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசின் மொத்த செலவின விகிதம் உண்மையில் குறைந்திருக்கிறது. இப்படி அரசின் செலவினத்தில் ஏற்பட்டுள்ள சரிவு எங்கே எல்லாம் பாதித்து இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

- உணவு மானியம் 2024 - 25 திருத்திய மதிப்பீட்டை விட 3 சதவீதமே உயர்ந்திருக்கிறது. 2023 - 24 உண்மையில் செய்யப்பட்ட உணவு மானியத்திற்கான செலவுகளை விட இது தொகை அடிப்படையிலேயே குறைவானதாகும். பண வீக்கத்தை கணக்கு போட்டால் இதன் உண்மை மதிப்பு இன்னும் குறைவு.

- மகாத்மா காந்தி ஊரக வேலை திட்டத்திற்கான ஒதுக்கீடு 86 ஆயிரம் கோடி என்கிற கடந்த ஆண்டு அளவிலேயே செய்யப்பட்டுள்ளது. அதில் எந்த உயர்வும் தரப்படவில்லை. 2023 - 24 ல் செய்யப்பட்ட இத்திட்டத்திற்கான செலவான ரூ 89154 கோடிகளை விட இது குறைவானது ஆகும். நடப்பு ஆண்டிலும் கூட ஜனவரி 25, 2025 அன்றைய தேதியிலேயே ரூ 6950 கோடி கூலி பாக்கி இருந்தது.

- சமூக நலத் திட்டங்களுக்கான மொத்த செலவினம் என்று எடுத்துக் கொண்டால் அதிலும் சரிவே இருக்கிறது. உடல் நலம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கு பட்ஜெட்டில் 2024 - 25 பட்ஜெட்டை விட 9.5 சதவீத உயர்வு என்று சொல்லப்படுவதும் பணவீக்கத்தை சேர்க்காத கணக்கே ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் விகிதம் குறைந்திருக்கிறது.

- பள்ளிக் கல்வி செலவினத்திற்காக ரூ 73000 கோடியிலிருந்து ரூ 78600 கோடி உயர்வு என்று சொல்லப்பட்டு இருப்பதும் உண்மையான உயர்வல்ல. இங்கேயும் பண வீக்கம் இடிக்கிறது.

- குழந்தைகளுக்கான சத்துணவு, ஏழை கர்ப்பிணி பெண்களின் உடல் நலனுக்கான சாக்சம் அங்கன்வாடி & போஷன் திட்டங்களுக்கும் பட்ஜெட் ஒதுக்கீடு 3.6 சதவீத அதிகரிப்பு என்பதும் உண்மையான உயர்வு அல்ல.

இப்படி சமூக நலச் செலவினங்கள் வெட்டப்பட்டு மாதச் சம்பளக்காரர்களுக்கு வருமான வரிச்சலுகை வழங்கப்பட்டு உள்ளது. ஒரு பகுதி மக்களின் வாங்கும் சக்தியை பறித்து இன்னொரு பகுதி மக்களுக்கு தந்தால் எப்படி நுகர்வு அதிகரிக்கும்? எப்படி பொருளாதார மந்தம் சரியாகும்? பணக்காரர்களை தொடாமலேயே "வாங்கும் சக்தியை மறுபங்கீடு" செய்திருக்கிறது இந்த பட்ஜெட்.

**கார்ப்பரேட்டுகளுக்கு கருணை**

பட்ஜெட்டுக்கு முதல் நாள் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் 15 ஆண்டுகள் இல்லாத உச்சத்தை கார்ப்பரேட் லாபங்கள் எட்டி இருக்கின்றன என்றும், ஆனால் அந்த வளர்ச்சி, வருமான உயர்வாக வேலை வாய்ப்பாக பிரதிபலிக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது.

பொருளாதார ஆய்வு அறிக்கை செல்வக் குவிப்பை பற்றி இவ்வளவு அழுத்தமாக அப்பட்டமாக குறிப்பிட்டு இருந்தாலும் பட்ஜெட்டில் கார்ப்பரேட் வரி உயர்த்தப்படவில்லை. செல்வவரி போடப்பட வேண்டும் என்கிற ஆலோசனையும் பரிசீலிக்கப்படவில்லை. உலகத்தின் பல நாடுகளில் உள்ள வாரிசுரிமை வரி அறிமுகமாக வேண்டும் என்ற கருத்துக்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆகவே 12 லட்சம் வரை வருமான வரி சலுகை வழங்குவதற்கு, மேல் தட்டு பிரிவினரிடம் இருந்து எதுவும் எடுக்கப்படாமல், அடித்தட்டு மக்களின் உணவும், உடல் நலமும், வேலையும் பறிக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை அப்படியே மாறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச நிதி மூலதனத்தின் மனம் நோகாமல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக சாமானிய மக்களின் வருமானமும் வாழ்வும் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது.

எந்தச் செல்வக் குவிப்பை பொருளாதார ஆய்வு அறிக்கை கவலையோடு சுட்டிக்காட்டியதோ அந்தச் செல்வக் குவிப்பு மேலும் அதிகரிக்கப் போகிறது என்பதே உண்மை.

**காரணங்கள் மூன்று**

இத்தகைய வழிமுறையை பாஜக கூட்டணி அரசு கையாள்வதற்கு மூன்று முக்கியமான காரணங்கள் உண்டு.

- முதலாவது, நடுத்தர வர்க்க மக்கள் கைகளில் அதிகமான பணப்பழக்கத்தை உறுதி செய்வது அவர்கள் மீதான அக்கறையினால் அல்ல. மாறாக அவர்கள் நுகரக்கூடிய பொருட்கள் ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுபவையாக இருப்பவையே

ஆகும். சாதாரண மக்கள் நுகரக்கூடிய பொருள்கள் சிறு தொழில்களில் உற்பத்தி செய்யப்படுபவை ஆகும். ஆகவே நடுத்தர வர்க்கத்தினர் கைகள் பணம் புழங்குவது ஏகபோக மூலதன உற்பத்திக்கான சந்தையை உருவாக்கித் தருவதே ஆகும். இது சிறு மூலதனத்தின் இழப்பில் பெருமூலதனம் வளர்வதற்கு வழி வகுத்து, மார்க்ஸ் கூறுகிற "மூலதன குவிப்புக்கு" மேலும் மேலும் ஊக்கம் அளிப்பதாகும். இந்துத்துவா - கார்ப்பரேட் கூட்டணியின் ஒரு தூணாக விளங்கும் கார்ப்பரேட் நலன்களை வலுப்படுத்துவதாகும்.

- இரண்டாவது, இந்திய நாட்டின் அமைப்புசாரா தொழில்கள் சார்ந்த கிராக்கி சரிவை அதிகாரப்பூர்வ மதிப்பீடுகள் வெளிக்காட்டுவதில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியை பற்றிய மதிப்பீடுகள் எல்லாம், கார்ப்பரேட் துறையை மையமாகக் கொண்டே வெளியிடப்படுகிறதே தவிர முறைசாரா தொழில்களின் நிலைமை அதில் பிரதிபலிப்பதில்லை. அரசின் கணக்கீடுகள் வளமான சித்திரத்தைத்தான் காண்பிக்கும். ஆகவே கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சி தேசத்தின் வளர்ச்சியாக சித்தரிக்கப்படும்.

- நடுத்தர வர்க்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகை நேரடியாக வெளியே தெரிகிறது. ஆனால் அடித்தள உழைப்பாளி மக்களிடம் இருந்து பறிக்கப்படுவது நேரடியானதாக இல்லை. ஆகவே பொருளாதார சூட்சுமங்கள் அதிகம் அறியாத மக்களிடம் கோபம் அதிகம் வெளிப்படாது. இதனால் நடுத்தர வர்க்கத்தினரிடம் தனது ஆதரவு தளத்தை விரிவுபடுத்தும் போது எளிய மக்களிடம் உள்ள ஆதரவு தளம் குறையாமல் பார்த்துக் கொள்ள முடியும். எளிய மக்களின் துயரங்களுக்கு ஏராளமான காரணங்கள் இருப்பதால் இத்தகைய குறிப்பிட்ட பொருளாதார முடிவு மட்டும் அவர்களின் கண்களை பெரிதும் உறுத்தாது என்றும் நினைக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மக்களின் கவனத்தை திசைதிருப்ப "இந்துத்துவா முழக்கம்" கைவசம் இருக்கிறது என்ற துணிச்சலும் காரணம்.

**விபத்து அல்ல வியூகம்**

நடுத்தர வர்க்கத்தினரின் ஆதரவை வருமானவரிச் செலவு மூலம் பெறுவதற்கான பிரச்சாரம் ஏற்கனவே துவங்கப்பட்டு விட்டது. பாஜக கூட்டணி அரசின் பல்வேறு அறிக்கைகளில் அது வெளிப்படுகிறது. மரபு ரீதியாக அரசின் கொள்கை அறிவிப்புகளைப் பற்றி மட்டுமே பேசக்கூடிய குடியரசு தலைவர் உரை இந்த முறை நடுத்தர வர்க்கம் பற்றிய பளபளப்பான குறிப்புகளை கொண்டதாக இருந்தது. நிதியமைச்சரோ பொருளாதார மீட்சிக்கு நடுத்தர வர்க்கத்தின் வல்லமை எப்படி பயன்படும் என்று வாயார புகழ்ந்து கொண்டே இருந்தார். ஆகவே வருமான வரிச் சலுகை என்பது ஏதோ விபத்து போல பட்ஜெட்டில் அமையவில்லை. மாறாக அரசின் மிகுந்த அரசியல் பொருளாதார வியூகமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வியூகம் நடுத்தர வர்க்கத்தினருக்கும், உழைப்பாளி மக்களுக்கும் இடையே விரிசல்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும். அதே நேரத்தில் இந்துத்துவா கார்ப்பரேட் கூட்டணிக்கு கூடுதல் ஆதரவை திரட்டுவதும் ஆகும். இதையெல்லாம் செய்யும் போது சர்வதேச நிதி மூலதனம் வகுத்துள்ள நவீன தாராளமய "லட்சுமண ரேகையை" தாண்டாமல் அதை மகிழ்விப்பதும் ஆகும். ஆகவேதான் பணக்காரர்கள் மீது வரி இல்லை. நிதிப் பற்றாக்குறையும் உயராமல் பார்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**சின்னக் கூடைகளும் பெரிய கூடையும்**

நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் தனது ஆதரவு தளத்தை விரிவாக்குவதற்காக அடித்தள மக்களின் நலன்களை காவு கேட்பது என்பது முதலாளித்துவ சமூகத்தில் தொடர்ந்து நடந்து வருவதே ஆகும். இப்போது என்ன வித்தியாசம் எனில், முந்தைய ஆட்சியாளர்கள் எல்லாம் அதை வெளிப்படையாக அறிவிக்க மாட்டார்கள். எளிய மக்களுக்கான அரசு என்றே அவர்கள் பேசுவார்கள். ஆனால் இப்போதைய ஆட்சியாளர்களோ பகிரங்கமாகவே உழைப்பாளி மக்களை தண்டித்து நடுத்தர வர்க்கத்திற்கு முன்னுரிமை தருகிறோம் என்று

பிரகடனப்படுத்துகிறார்கள். இந்த மூர்க்கம் எளிய மக்களின் வாழ்க்கை மீது பெரும் காயத்தை உருவாக்கியுள்ளது.

ஆனால் நடுத்தர வர்க்கத்தினர் ஒரு உண்மையை மறக்கக் கூடாது. கோவிட் காலத்தில் பொருளாதார நெருக்கடி என்றவுடன் அப்போதும் கார்ப்பரேட் வரிகள் உயர்த்தப்படவில்லை. மாறாக அரசு ஊழியர்களின், அரசு ஓய்வூதியர்களின் பஞ்சப்படி உயர்வு பறிக்கப்பட்டது. நடுத்தர மக்களுக்கும், அடித்தள மக்களுக்கும் வைக்கப்பட்டுள்ள ஒரே கூடையில் இருந்தே இங்கேயும் அங்கேயுமாக அவர்களுக்குள் கை மாற்றப்படும் உத்தியை புரிந்து கொள்ள வேண்டும். இன்னொரு பல மடங்கு பெரிய கூடை நிரம்பி வழிகிறது. அது எல்லாமே இந்த சின்னக் கூடைகளில் இருந்து பறிக்கப்பட்டு குவிக்கப்பட்டதே. அதுவே கார்ப்பரேட்டுகளின் செல்வக் குவிப்பு.

இத்தகைய புதிய வியூகத்தை தாண்டி இந்த பட்ஜெட் நவீன தாராளமயப் பாதையிலேயே மேலும் தேசத்தை இழுத்துச் சென்றுள்ளது. விவசாய விளைபொருள்களுக்கு விவசாய அறிஞர் எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைத்த குறைந்தபட்ச ஆதார விலை வழங்கப்படுவது பற்றி பேச்சே இல்லை. இன்சூரன்ஸ் துறையில் 100% அந்நிய முதலீடு அனுமதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டு ஏகபோகங்களுக்கு நுகர்வைத் தூண்டி சந்தையை உருவாக்கித் தருவோம் என்ற உத்தரவாதம் தரப்பட்டுள்ளது.

**நீதி என்ன?**

அந்நிய மூலதனத்திற்கு ஊக்குவிப்பு தருவது டாலருக்கு எதிரான ரூபாய் வீழ்ச்சியை தடுத்து நிறுத்தும் என்று ஆட்சியாளர்கள் கருதினால் அதுவும் நடைபெறாது. பட்ஜெட் வெளிவந்த இரண்டு நாட்களிலேயே டாலருக்கு 87 ரூபாய்க்கும் கீழே அதன் மதிப்பு சரிந்தது. கதையின் நீதி என்னவெனில், ஒரு பகுதி மக்களை தாக்கி இன்னொரு பகுதி மக்களின் ஆதரவை திரட்டுவது என்பது அரசின் இமேஜை உயர்த்தலாம்; ஆனால் தேசத்தின் பொருளாதாரத்தை உயர்த்தாது என்பதே. ●

**கவிதை**

## தூசி தட்டுவோம் நம் சீற்றத்தை

**- KCA.தினேஷ்**

பெருங்கடலை
தன் சிறு துடுப்பால்
அசைக்க முயலும்
மீனின் வைராக்கியம்.!!

இறுகிய மண்ணை
பிளந்து வெளிவரும்
விதையின் தன்னம்பிக்கை.!!

பெரும் புயலையே
உருவாக்கும்
பட்டாம்பூச்சி
மெல்லிறகின்
வலிமை.!!

அடைபட்ட அறையில்
அடங்காமல் அலைந்து ஆர்ப்பரிக்கும் பூனையின்
ஆத்திரம்.!!

பிடிக்காத உணவுக்கு
ஒருமுறைகூட இளகாத
இறுக வாய்மூடி மறுக்கும்
குழந்தையின் பிடிவாதம்.!!

மிக மெல்லிய
நூலிழையால்
பெரும் இரையை
பிடிக்கும் சிலந்தியின்
காத்திருப்பு.!!

நகர்ந்தே போனாலும்
நாள் பல ஆனாலும்
இலக்கை அடைய
இறுதி வரை முயலும்
நத்தை.!!

இதில் ஒன்றுகூடவா இல்லை
ஓரறிவு.
ஈரறிவு..
மூவறிவு...
நான்கறிவு....
ஐந்தறிவுக்கு....,
எல்லாம் மேலான
ஆறறிவு படைத்த
நமக்கு..!!

தோழர்களே!
தூசி தட்டுவோம்
நம் சீற்றத்தை.!!
கேள்வி கேட்போம்
இந்த அரசாங்கத்தை.!!
பலப் படுத்துவோம்
நாம் உணர்வுகளை.!!
பறித்தெடுப்போம்
நமது உரிமைகளை.!! ●

# 10.2.2025 அன்று நடைபெற்ற 24 மணிநேர தர்ணா போராட்டம்

**தஞ்சாவூர்**




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்தின் சார்பாக 24 மணிநேர தர்ணா ஆர்ப்பாட்டம் தஞ்சாவூர் மாவட்ட பணகல் பில்டிங் முன்பு மாவட்ட தலைவர் ஆ.செந்தில்குமார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்வில் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர்.V. சோமசுந்தரம் துவக்கயுரையாற்றினார் மாவட்ட செயலாளர் தோழர் ரமேஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மேலும் முன்னாள் மாநில செயலாளர் தோழர் கோதண்டபாணி ,பன்னீர்செல்வம் கண்டன உரையாற்றினார் ,மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர்.ஆ. ரங்கசாமி ,மாநில செயலாளர் தோழர் செ.பிரகாஷ் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் ,அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க தஞ்சாவூர் கோட்டத் தலைவர் தோழர்.S.செல்வராஜ் நிறைவுரை ஆற்றினார். மாவட்டப் பொருளாளர் ஜி.இராதாகிருஷ்ணன் நன்றி கூற போராட்டம் எழுச்சியுடன் நிறைவுற்றது.

**திருவாரூர்**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டத்தின் சார்பாக 24 மணிநேர தர்ணா ஆர்ப்பாட்டம், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகம் முன்பு மாவட்ட தலைவர் தோழர் எஸ்.சுதாகர் தலைமையில் நடைபெற்றது இதில் தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் குரு. சந்திரசேகரன் ஆர்ப்பாட்டத்தை துவங்கி வைத்து உரையாற்றினார் மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். செங்குட்டுவன் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார் மேனாள் மாநில தலைவர் தோழர் எம்.அன்பரசு மேனாள் மாநில நிர்வாகிகள் தோழர் எஸ்.சிவக்குமார் தோழர் கே.எம். தியாகராஜன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார் நிறைவாக மாநில செயலாளர் செ. பிரகாஷ் கலந்துகொண்டு நிறையுரை ஆற்றினார் மாவட்ட பொருளாளர் தோழர் ஏ.வி.சுப்பிரமணியன் நன்றி உரை கூற நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது இதில் துறைவாரிச் சங்க மாவட்ட, மாநில மற்றும் முன்னணி ஊழியர்கள் பெண் தோழர்கள் அதிகமாக கலந்து கொண்டனர்

**அரியலூர்**



அரியலூர் மாவட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக 24 மணி நேர தர்ண ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் தோழர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது இதில் மாநிலச் செயலாளர் தோழர் செ. பிரகாஷ் துவக்கயுரையாற்றினார் மாவட்டச் செயலாளர் தோழர் எம்.ஷேக் தாவூத் கோரிக்கை

விளக்க உரையாற்றினார் மாவட்ட துணைத் தலைவர் தோழர் ராஜவேம்பு வரவேற்புரை ஆற்றினார் மாவட்ட பொருளாளர் தோழர் ஆர்.பைரவன் நிறைவுறையாற்றினார் மாவட்ட இணைச் செயலாளர் தோழர்இரா. சந்திரசேகர் நன்றியுரையாற்றினார் இந்த நிகழ்வில் அனைத்து வட்டக்கிளை நிர்வாகிகள் தோழமைச் சங்க நிர்வாகிகள் முழுமையாக பங்கேற்றனர்

**கடலூர்**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடலூர் மாவட்டத்தில் 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் ராம. வெங்கடாஜலபதி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட துணை தலைவர்கள் பாபு, ஹரி கிருஷ்ணன் இணைச் செயலாளர் பொற்செல்வி ,காந்தி முன்னிலை வகித்தனர் மாநில செயற்குழு உறுப்பினர் லெனின் வரவேற்பு உரை ஆற்றினார் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கே.மகாலிங்கம் இந்த நிகழ்வை துவக்கி வைத்து துவக்கோரையாற்றினர் மாவட்டச் செயலாளர் எஸ்.பாலகிருஷ்ணன் கோரிக்கைகளை விளக்கி பேசினார் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஒழித்திய சங்கத்தின் மாநில செயலாளர் ஆர். மனோகரன் நிறைவுறியாற்றினர் மாவட்ட பொருளாளர் டி.வெங்கடேசன் நன்றி கூறினார்

**பெரம்பலூர்**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பெரம்பலூர் மாவட்டத்தின் சார்பாக 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் பா. குமரி ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வை மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆ.ரங்கசாமி துவங்கி வைத்து துவக்கயுறை ஆற்றினார் மாவட்ட நிர்வாகிகள் இதில் முன்னிலை வகித்தனர் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் விஸ்வநாதன் மற்றும் துறை வாரிச் சங்க மாவட்ட தலைவர்கள் கண்டன உரை ஆற்றினர் நிறைவாக இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் தெய்வ. ராஜா நன்றி உரை கூறினார் இந்த நிகழ்வில் பெரம்பலூர் மாவட்டத்தின் அனைத்து துறை வாரிச் சங்க முன்னணி ஊழியர்கள் முழுமையாக பங்கேற்றனர்

**திருச்சி**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருச்சி மாவட்டத்தின் சார்பாக தூத்துக்குடியில் எடுக்கப்பட்ட மாநில மாநாட்டினுடைய அறைகூவல் தீர்மானத்தின்படி 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் தோழர் கா.பால்பாண்டி தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர் மாவட்டத் துணைத் தலைவர் பா செந்தில் குமார் வரவேற்புரை ஆற்றினார் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ச.பிரகாஷ் துவக்கி வைத்து உரையாற்றினார் மாவட்ட செயலாளர் தோழர் சோ.நவநீதன் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மேனால் மாநில நிர்வாகி தோழர் ஆ.பெரியசாமி கண்டன உரையாற்றினார் மேலும் துறை வாரி சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் சார்பாக தோழர் M.V.செந்தமிழ் செல்வன் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மேனாள் மாநில தலைவர் எஸ்.

சுடலை யாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள் ஆர்ப்பாட்ட உரையாற்றினர் நிறைவாக மாநில துணைத்தலைவர் தோழர் மு.செல்வராணி நிறைவுரையாற்றினார் மாவட்ட பொருளாளர் கா.சிவசங்கர் நன்றியுரை கூற ஆர்ப்பாட்டம் இனிதே நிறைவு பெற்றது

**மதுரை**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரை மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 24 மணி நேர தர்ண ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் இரா.தமிழ் தலைமையில் நடைபெற்றது மாவட்ட துணை தலைவர்கள் ,இணைச் செயலாளர்கள் இந்த நிகழ்வில் முன்னிலை வகித்தனர் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் எம். ரம்யா வரவேற்புரை ஆற்றினர் மேனாள் பொதுச் செயலாளர் ஆ. செல்வம் துவக்க உரையாற்றினார் மாவட்ட செயலாளர் கா. சந்திரபோஸ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மாநிலச் செயலாளர் க. நீதி ராஜா தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன் இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட செயலாளர் இரா.லெனின் ஜாக்டோ ஜியோ நிதிகாப்பாளர் வி.சா. நவநீதகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார் தோழமைச் சங்க மாவட்ட ,மாநில நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர் இந்த நிகழ்வில் மதுரை மாவட்டத்தில் பணிபுரிகின்ற அனைத்து அரசு ஊழியர்களும் கலந்து கொண்டனர் மாநிலச் செயலாளர் ஆ.ஜெசி நிறைவுறையாற்றினார் மாவட்ட பொருளாளர் ஆ.பரமசிவன் நன்றியுரை கூற 24 மணி நேர ஆர்ப்பாட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது

**சிவகங்கை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிவகங்கை மாவட்டம் சார்பாக மாவட்ட ஆட்சியர்



அலுவலகம் முன்பாக 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் தோழர் ஓ கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட மகளிர் அமைப்பாளர் தோழர் பி.லதா வரவேற்புரை ஆற்றினார் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர் மாவட்டச் செயலாளர் தோழர் ராதாகிருஷ்ணன் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மாநில செயலாளர் தோழர் ஆ. ஜெசி நிகழ்வை தொடங்கி வைத்து துவக்கு உரையாற்றினார்கள் தோழமைச் சங்க நிர்வாகிகள் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் புரட்சித்தம்பி உள்ளிட்ட மாவட்ட மாநில நிர்வாகிகள் போராட்ட வாழ்த்துரை வழங்கினர் இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்டத் தலைவர் தோழர் வீரையா சிறப்புரை ஆற்றினார் தமிழ்நாடு அனைத்து சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் பி.பாண்டி நிறைவுறையாற்றினார் மாவட்ட பொருளாளர் இரா.மாரி நன்றி உரை கூறினர் இந்த நிகழ்வில் திரளாக அரசு ஊழியர்கள் அனைத்து துறை வாரிச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

**நாகப்பட்டினம்**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நாகப்பட்டினம் மாவட்டம் சார்பாக 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடம் முன்பு மாவட்டத் தலைவர் தோழர்.அ. அற்புதராஜ் ரூஸ்வெல்ட்

தலைமையில் நடைபெற்றது மாநில செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதர் வரவேற்புரை ஆற்றினார் மேனாள் மாநிலத் தலைவர் மு.அன்பரசு இந்த நிகழ்வை துவங்கி வைத்து துவக்க உரையாற்றினார் மாவட்ட செயலாளர் ஆ.தி. அன்பழகன் கோரிக்கை விளக்க உரையாற்றினர் கிழ்வேளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் வி.பி.நாகை மாலிக் இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றினார் மேலும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் சங்கம் சார்பாக தோழர் சிவகுமார் இந்திய தொழிற்சங்க மையத்தின் சார்பாக கே.தங்கமணி அனைத்து மருந்தாளுனர் சங்கம் பொதுச்செயலாளர்

உ. சண்முகம் உள்ளிட்ட தோழமைச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர் மாநிலச் செயலாளர் தோழர் சு. வளர்மாலா இந்த நிகழ்வில் நிறைவுரையாற்றினார் மாவட்ட பொருளாளர் தோழர் ப.அத்துடன் சேரல் நன்றியுரை கூற கோரிக்கை முழக்கமிட்டு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நாகப்பட்டினத்தின் அனைத்து வட்ட கிளைகளிலிருந்தும் முழுமையாக முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்

**திருநெல்வேலி**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருநெல்வேலி மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 24 மணிநேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் தோழர் வீ. பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட நிர்வாகி கோபாலகிருஷ்ணன் வரவேற்பு உரையாற்றினார் மாநில துணைத்தலைவர் தோழர் முருகன் இந்த நிகழ்வை துவங்கி வைத்து துவக்கு உரையாற்றினார் மாவட்ட செயலாளர் ஈ. பிரகாஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மேலும் வருவாய் துறை அலுவலர் சங்கம் மாவட்ட தலைவர் சுப்பு, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர் பால்ராஜ், மருத்துவ துறை ஊழியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் மாரிமுத்து, மருந்தாளுனர் சங்கம் மாவட்ட செயலாளர் பாஸ்கரன் உள்ளிட்ட துறைவாரிச் சங்க மாவட்ட ,மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்

**கன்னியாகுமரி**




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் மாவட்டத் *A.M.I.*பரீத் தலைமையில் 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட செயலாளர் தங்க. மோகன் துவங்கி வைத்து துவக்வுரை ஆற்றினார் மாவட்ட செயலாளர் த. பிரான்சி சேவியர் கோரிக்கை விளக்க உரையாற்றினார் ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி நிர்வாகி சுமார்ஹாசன் முன்னாள் மாநில துணைத்தலைவர் கிறிஸ்டோபர் எம்ஆர்பி செவிலியர் சங்க பொதுச் செயலாளர் சுபின் , தமிழ்நாடு வருவாய்துறை ஊழியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் பத்மகுமார் உள்ளிட்ட முன்னணி ஊழியர்கள் முழுமையாக இதில் கலந்துகொண்டு கோரிக்கை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

**மயிலாடுதுறை**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மயிலாடுதுறை மாவட்டம் சார்பாக 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் தோழர் ஆர். கலா தலைமையில் நடைபெற்றது மயிலாடுதுறை வட்டச் செயலாளர் டி. பழனிச்சாமி வரவேற்புரை ஆற்றினார்மாநிலச் செயலாளர் தோழர் சு. வளர்மாலா நிகழ்வை துவங்கி வைத்து துவக்க உரையாற்றினார் மாவட்ட செயலாளர் டி. இளவரசன் கோரிக்கை விளக்க உரையாற்றினார் முன்னாள் மாநில நிர்வாகிகள் தோழமைச் சங்கம் மாவட்ட செயலாளர்கள் வாழ்த்துரை வழங்கினர் மேனாள் மாநிலத் தலைவர் தோழர் மு. அன்பரசு சிறப்புரை ஆற்றினார் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலக சங்கத்தின் மேனாள் மாவட்ட தலைவர் தோழர் டி.விஜயராகவன் நிறைவுரையாற்றினார் மாவட்ட பொருளாளர் தோழர் கே.ஜவஹர் நன்றியுரை கூறினார்

**தென்காசி**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தென்காசி மாவட்டத்தில் 24 மணி நேர தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் தோழர் சு.கோபி தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாநிலச் செயலாளர் இ.மைக்கேல் லில்லி புஷ்பம் துவங்கி வைத்தார்

மாவட்டச் செயலாளர் தோழர் வே.வெங்கடேஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் துறைவாரிச் சங்க மாநில ,மாவட்ட நிர்வாகிகள் முன்னணி ஊழியர்கள் முழுமையாக இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர் மற்றும் கண்டன உரையாற்றினர் காப்பீட்டுக் கழக ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் அ.பேச்சி முத்து நிறைவு உரையாற்றினார் மாவட்ட பொருளாளர் தோழர் சு.வேல்ராஜன் நன்றியுரை கூறினார்

**காஞ்சிபுரம்**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் காஞ்சிபுரம் மாவட்டம் சார்பாக தூத்துக்குடியில் எடுக்கப்பட்ட மாநாட்டில் முடிவின்படி 24 மணிநேர தர்ணா ஆர்ப்பாட்டம் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது கருவூல கணக்கு துறை அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் வெ.லெனின் இந்த நிகழ்வை துவங்கி வைத்து துவக்கு உரையாற்றினார் மாவட்ட செயலாளர் தோழர் துரை.மருதன் கோரிக்கை விளக்க உரையாற்றினார் மேனாள் மாநிலச் செயலாளர் ராஜா பாதர் மேனாள் மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் துறை வாரிச் சங்க மேனாள் மாநிலச் செயலாளர் ஒய். சீதாராமன் துறை வாரிச் சங்க மாநில நிர்வாகிகள் தோழர் எம்.தாமோதரன் எம் .ஆர். திலகவதி உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர் மாநிலத் துணைத் தலைவர் தெ.வாசுகி நிறைவேறியாற்றினார் மாவட்ட பொருளாளர் தோழர் வி.வெங்கடேஷ் நன்றியுரை கூறினார் இந்த நிகழ்வில் அனைத்து துறை வாரிச்சங்க நிர்வாகிகள் முன்னணி ஊழியர்கள் முழுமையாக கலந்து கொண்டனர்.

**திருப்பூர்**



# மார்ச் எட்டு

- பெரணமல்லூர் சேகரன்

மாதர்கள் பதுமைகளாக
மேதினியில் உலா வரும் நாளன்று
ரோஜா மலர் கொடுத்து
ராஜபாட்டையில் பவனி வரும் நாளன்று

கற்களும் முட்களும் நிறைந்த
காட்டாற்றுப் பாதையில்
எட்டு மணி வேலை உரிமை
வாக்குரிமை எனும்
இருகண் இணை உரிமைகளை
ஒரு மாதராய்
விஸ்வரூபம் எடுத்த போரில்
வெற்றி கண்ட சரிதம்
போற்றுதலே மனிதம்

நூறாண்டு கடந்தும்
வேறான உரிமை
கிட்டாத கொடுமை
கிட்டும் புதுமை
எட்டும் பொதுமையில்

பிறப்பு முதலாய்
இறப்பு ஈறாய்
வெறுப்பு விதைக்கும்
பாலினப் பாகுபாடு
வேரறுக்க நீ கூடு

கல்வி கானலாய்
எளியோர்க்குக் காத தூரமாய்
வேலை கனவாய்
பெருநிறுவனக் களவாய்

மாநிலப் பட்டியலின் கல்வி
களவாடிக் கடத்தப்பட்டது
பொதுப் பட்டியலுக்கு

இந்தியாவின் ஆன்மா
பிந்திய ஊர்களின்
முதுகெலும்பு வேளாண்மை

முதுகுடைந்து படுக்கையில்
மகளிரோ பாதிப்பில்

நடவும் அறுவடையும்
நடப்பதே அத்திப்பூத்தாற்போல்
நடப்பதோ எந்திரத்தில்
கிடைக்குமோ வேலை மந்திரத்தில்?

காதலும் வீரமும்
காலங் காலமாய்
களம் கண்டன
உளம் விரும்பி
சங்க காலந் தொட்டு
எங்கும் பரவி திக்கெட்டும்

கணினி யுகத்திலும்
கண்மூடித்தன சாதியம்
வேர்விட்டு மோதியும்
அரங்கேறும் ஆணவக் கொலைகள்

ஆற்றுக்கும் போற்றும் சாமிக்கும்
ஆயிரமாயிரம் பெயர்களிங்கே
பெண்கள் பாலியலுக்கு மட்டுமே
நிஜத்திலிங்கே

குழந்தைகள் முதலாய்
தாய்மார்கள் ஈறாய்
ஆணாதிக்கப் பொறியில்
சிக்கிச் சின்னாபின்னமாய்
பாலியல் வன்மம் திண்ணமாய்

ஆண்டுதோறும்
ஆடவர்களும் அனுசரிக்கும்
மகளிர் தினங்களை
மேதினி கொண்டாடுவது இருக்கட்டும்

பெண்களும்
ஆண்களுக்கு நிகரான
மனிதர்களாவது எப்போது?
புனிதர்களாவீர் நீவீர் அப்போது..

கட்டுரை

# தமிழக அரசும் பழைய பென்சனும்

**- ஆர்.இளங்கோவன்**

தமிழக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தீவிர பெருந்திரள் தொடர் போராட்டத்தில் குதித்துவிட்டனர்.இது காலவரையற்ற வேலை நிறுத்தம் வரை போகும் என்று அறிவித்துள்ளனர்.பெரிய பிரச்னை பழைய பென்சன் தான்.

50 ஆண்டுகளுக்கு முன் நான் ஒரு கிராமத்தில் பெண் பார்க்க பொயிருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் எவ்வளவு சம்பளம் என்றார்.சொன்னேன்.பிஞ்சன் உண்டா என்று கேட்டார்.பென்சனைத்தான் கேட்கிறார் என்று புரிந்து கொண்டு உண்டு என்றேன். அப்ப பொண்ண கொடுப்பா என்றார். எதற்காம் தெரியுமா? எனக்கு பிறகு என் மனைவி கையேந்த வேண்டியிருக்காதாம். அரைக்காசு உத்தியோகம் என்றாலும் அரசாங்க உத்தியோகம் என்பது அதற்காகத்தான்.

#### தேர்தல் வாக்குறுதி

திரு மு க ஸ்டாலின் தேர்தல் வாக்குறுதிதான் பேசு பொருள் ஆகி இருக்கிறது. தேர்தல் வாக்குறுதியின் 152 வது வாக்குறுதி போக்குவரத்து தொழிலாளர்களுக்கு பழைய பென்சன் அமுல் படுத்தப்படும் என்பதாகும். போக்கு வரத்தில் 1.11 லட்சம் ஊழியர்களில் 90,970 பேர் புதிய பென்சனில் உள்ளனர்.

309 வது வாக்குறுதி ''அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு புதிய ஓய்வூதியம் கைவிடப்பட்டு பழைய ஓய்வூதியத்திட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்''

தெளிவான வாக்குறுதி.பரிசீலிக்கப்படும் என்றோ கமிட்டி அமைக்கப்படும் என்றோ சொல்லவில்லை.பழைய ஓய்வூதியத்திட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்றுதான் உள்ளது.

#### மக்களின் விருப்பம்

தேர்தல் அறிக்கையைப்பற்றி திரு மு க ஸ்டாலின் அவர்கள் அதிலேயே சொன்னது என்னவென்றால் "அது தனிப்பட்ட கழகத்தின் விருப்பமாக மட்டும் இல்லாமல் தமிழ் நாட்டு மக்களின் விருப்பமாகவே அமையும்"என்பதுதான். அவர் மேலும் சொல்கிறார்: "கலைஞர் வழியில் நானும் சொன்னதைச்செய்வேன்.செய்வதைத்தான் சொல்வேன் என்பதை தமிழக மக்களுக்கு எனது உறுதி மொழியாக வழங்குகிறேன்."

"கழக ஆட்சி மலரும்.மக்களின் கவலைகள் யாவும் தீரும்." எனவே திமுக அதிமுக மாதிரியில்லை.வித்தியாசமான கட்சி என்று. நம்பினார்கள்.

#### ஊழியர் எண்ணிக்கை

தமிழக அரசு ஊழியர்களில் 2.29 லட்சம் பேர் பழைய பென்சனில் உள்ளனர் என்றும் 6.14 லட்சம் பேர் புதிய பென்சனில் உள்ளனர் என்றும் அரசின் நிதி அமைச்சகத்தின் பென்சன் பற்றிய கொள்கை அறிக்கை தெரிவிக்கிறது. இந்த கணக்கில் பள்ளி கல்லூரி ஆசிரியர்களும் அடங்கும்.

#### மாநிலங்களில் பழைய பென்சன்

மேற்கு வங்கத்தில் இடதுசாரி அரசு இருந்த காலத்திலிருந்தே பழைய பென்சன் தொடர்கிறது.ராஜஸ்தானில் தமிழகத்தை விட கூடுதல் பேர் புதிய பென்சனில் இருந்த போதுதான் பழைய பென்சனை அமுல்படுத்தினார்கள்.அவர்களுக்கு பிஎஃப்ஆர்டிஏ ஊழியர் கணக்கில் இருக்கும் பணத்தை திருப்பிக்கொடுக்க மறுக்கிறார்கள். இருந்தும் ஜார்க்கன்ட், சட்டிஸ்கர், பஞ்சாப். இமாசலபிரதேசம் ஆகிய மாநில அரசுகள்

பழைய பென்சனை அமலாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**பணமில்லையா? மனமில்லையா?**

தமிழக அரசின் ஊழியர்களின் தொகை ரூ 73,974 கோடி ஆயுள் காப்பீட்டு ஓய்வூதிய நிதியில் அரசு சேமித்து வைத்திருப்பதாக அரசின் பென்சன் கொள்கை அறிக்கை கூறுகிறது.பி எஃப் ஆர் டி ஏ திருப்பித்தரும் பிரச்சினையே தமிழகத்துக்கு இல்லை. அரசு இதில் பாதியை 37000 கோடியை அரசு பென்சன் நிதியமாக வைத்துக்கொண்டு ஓய்வு பெறுவோரின் பென்சன் செலவை அதன் வட்டியிலிருந்து ஈடுகட்டலாம்.7% வட்டி என்றால் 2590 கோடி வட்டி கிடைக்கும். ஊழியர் பங்களிப்பான மீதி பாதியான 37000 கோடியை அவரவர் வருங்கால வைப்பு நிதியில் போடவேண்டும்.

**சாத்தியமே**

பழைய பென்சன் வாங்குவோர் 6.97 லட்சம் பேர்.இவர்களுக்கான பென்சன் செலவு 2024-25 ல் ரூ 37,663 கோடி.இது அரசின் மொத்த செலவான 3.48 லட்சம் கோடியில் 10 சதம் தான்.புதிய பென்சனில் உள்ளவர்களில் 7738 பேர் 2023-24 ல் ஓய்வு பெற்றனர்.சராசரி ஆக 8000 பேர் ஓய்வு பெறுவர் என்றால் மொத்த பழைய பென்சனர்களில் இது 1 சதம்தான். பென்சன் செலவான 37763 கோடியில் இது 1 சதம் தான்.அதாவது 376 கோடிதான் கூடுதல் செலவாகும்.இதனை அரசு கையிலிருக்கும் நிதிய வட்டியான 2590 கோடியிலிருந்து ஈடுகட்டலாம்.

**கமிட்டி**

ஆனால் அடுத்த தேர்தல் நெருங்கும் வேளையில் கொடுத்த வாக்குறுதியை தூக்கிப்போட்டுவிட்டு இப்போது மீண்டும் ஒரு கமிட்டியை நியமிப்பதும் அதற்கு 9 மாத அவகாசம் கொடுப்பதும் தங்களை ஏமாற்றவே என்று நியாயமாகவே அரசு ஊழியர்கள் நினைக்கிறார்கள். குதிரை கீழே தள்ளியதோடு நில்லாமல் குழியும் பறித்த கதையாக மத்திய அரசின் ஒருங்கிணைந்த பென்சன் திட்டத்தையும் சேர்த்து ஆராயப்போவதாகக் கூறுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல ஊழியர் உணர்கின்றனர்.

**மத்திய அரசின் புதிய பென்சனும் தமிழகத்தில் அமுலாகவில்லை**

மத்திய அரசு ஊழியர்களுக்கு இருக்கும் புதிய பென்சனையே தமிழக அரசு அமல் படுத்தவில்லை.அங்கே இறந்த ஊழியரின் குடும்பத்துக்கு பழைய பென்சன் விதிகளில் உள்ள குடும்ப பென்சனும் இறப்பு பணிக்கொடையும் கிடைக்கிறது.ஊனமுற்று விருப்ப ஓய்வில் சென்றால் பழைய பென்சன் விதிகளில் இன்வேலிட் பென்சனும் பணிக்கொடையும் கிடைக்கிறது.ஓய்வு பெறுபவருக்கு பணிக்கொடையும் ஆனுவிட்டி வடிவில் மாதந்தோறும் குறைவாகவாவது உத்தரவாதம் இல்லாவிட்டாலும் ஒரு பென்சன் கிடைக்கிறது.அரசு பங்களிப்பு 14 சதம் கிடைக்கிறது.ஓய்வு பெற்றால் 60 சதம் எடுத்துக்கொள்ளலாம். 40 சதம் ஆனுவிட்டியில் போட்டு இருவரும் இறந்தபின் அந்த 40 சதம் குடும்பத்துக்கு திரும்ப கிடைக்கும்.

தமிழக அரசு இதில் எதையும் செய்யாமல் மொத்ததொகையை கொடுத்து அனுப்புகிறது. இப்படி மே 2024 வரை 38,129 பேர் ஓய்வு இறப்பு முதலிய காரணங்களால் போய்விட்டனர்.மாதந்தோறும் ஒரு தொகை கிடைக்காத போது அதனை பங்களிப்பு பென்சன் என்று சொல்வதில் என்ன அர்த்தம்?

பணிக்கொடை சட்டப்படி அனைவருக்கும் பணிக்கொடை தர வேண்டும்.போக்குவரத்தில் புதிய பென்சனில் ஓய்வு பெறுபவருக்கும் பணிக்கொடை தரப்படுகிறது.மற்றவர்களுக்கு இது மறுக்கப்படுகிறது.

**பழைய பென்சன் பலன்கள்**

ஆனால் புதிய பென்சன் பழைய பென்சனுக்கு ஈடாகாது.பழைய பென்சனில் 10 ஆண்டு பணிக்கு மத்திய அரசிலும், மாநிலத்தில் 30 ஆண்டு பணிக்கும், 50 சதம் சம்பளம் உத்தரவாதமாக பென்சனாக கிடைக்கிறது.கம்யூட்டேசன் கிடைக்கிறது.

குடும்ப பென்சன் கிடைக்கிறது.குறைந்த பட்ச பென்சன் மத்திய அரசில் 9000மும் மாநிலத்தில் 7850 ம் கிடைக்கிறது.80 வயதுக்குமேல் 100 வயதுவரை கிடைக்கும் கூடுதல் பென்சன்,ஊதியக்குழு வரும்போது பென்சன் உயர்வு இவை அனைத்துக்கும் அகவிலைப்படி இவை அனைத்தும் பழைய பென்சனில் இருப்பவை புதிய பென்சனில் கிடையாது. எனவே பழையபென்சனை கோருகிறோம்.

**ஒருங்கிணைந்த பென்சன் திட்டம்**

பல போராட்டங்களுக்கு பிறகு மத்திய அரசு உத்தரவாதமான 50 சத பென்சன் என்றும் அதில் 60 சதம் குடும்ப பென்சன் என்றும் குறைந்த பட்ச பென்சன் 10000 என்றும் அகவிலைப்படியும் உண்டு என்றும் கூறி ஒருங்கிணைந்த பென்சன் திட்டத்தை அரசிதழில் சனவ்ரி 25ல் வெளியிட்டது.சனவரி 30 ம் தேதி அதற்கான விதிகளை பி எஃப் ஆர் டி ஏ வெளி யிட்டு கருத்து கேட்டுள்ளது.இது அனைத்தும் ஒரு ஏமாற்று என்பது திட்டத்தை ஆராய்ந்தால் புரியும்.

ஒருங்கிணைந்த பென்சன் திட்டத்தில் உங்கள் 10 சதத்தோடு அரசு 10சதம் போடும்.இரண்டும் சேர்ந்து தனிநபர் கார்ப்பமெனப்படும். அரசு 8.5 சதம் போடும்.அது பூல் கார்ப்பஸ் எனப்படும்.தனிநபர் கார்ப்பஸ் சந்தையில் முதலீடு செய்யப்படும்.அதற்கு அசலே பறி முதலாகும் அபாயம் உண்டு என்று செபி கூறு கிறது.பி எஃப் ஆர் டி ஏ சட்டமும் கூறுகிறது.

நீங்கள் ஒய்வு பெறும்போது உங்கள் கார்ப்பஸ் முழுமையாக இருக்கவேண்டும். நடுவில் பணம் எடுக்காமல்,ஒழுங்காக நேரத்தில் கட்டி இருந்தால் சந்தை நிலையாக இருந்தால் உங்கள் கார்ப்பஸ் என்னவாக இருக்குமோ அதற்கு பெஞ்ச்மார்க் கார்ப்பஸ் என்று பெயர்.இதனை பி எஃப் ஆர் டி ஏ தான் தீர்மானிக்கும்.அதற்கு ஒரு வரையறை இல்லை. உங்கள் பணிக்காலம் 25 ஆண்டுகள் இருந்தால் நேராக 12 மாத சராசரி சம்பளத்தின் 50 சதம் உங்களுக்கு பென்சனாக கிடைக்காது. உங்கள் தனிநபர் கார்ப்பசும் பெஞ்ச்மார்க் கார்ப்பசுக்கு குறையாமல் இருக்க வேண்டும். தனி நபர் கார்ப்பஸ் முழுவதையும் அரசின் பூல் கார்ப்பசுக்கு தாரை வார்க்க வேண்டும். அது திரும்ப கிடைக்காது.அப்போது தான் 50 சதம் பென்சன் கிடைக்கும்..தனி நபர் கார்ப்பஸ் குறைந்தால்அதே விகிதத்தில் பென்சன் குறையும்.தனிநபர் கார்ப்பஸ் சந்தையில் விழ்ந்து விட்டால் உங்கள் பென்சனும் வீழ்ந்துவிடும் அபாயம் உண்டு. எனவேதான் இதுவும் உத்தரவாதமான பென்சன் கிடையாது.

பணிக்காலம் 10 ஆண்டு என்றால் பென்சன் சம்பளத்தில் 20 சதம் தான் கிடைக்கும். குறைந்த பட்சம் பென்சன் 10000 என்பது உங்கள் தனிநபர் கார்ப்பஸ் பெஞ்ச்மார்க் கார்ப்பசுக்கு குறையாமல் இருந்தால்தான். நீங்கள் தனி நபர் கார்ப்பசிலிருந்து 60 சதம் எடுத்துக்கொள்ளலாம்.ஆனால் உங்கள் பென்சன் 60 சதம் குறைந்துவிடும்.உங்கள் பென்சன் 10000 என்றால் அதில் 60 சதம் குறைந்து 4000 தான் பென்சன் கிடைக்கும். உங்கள் பென்சன் 8000 என்றால் 3200 தான் பென்சன் கிடைக்கும்.குடும்ப பென்சன் பென்சனில் 60 சதம்.அதற்கு குறைந்த பட்சரூ10000 உத்தரவாதம் கிடையாது.உங்கள் பென்சன் ரூ3200 என்றால் அதில் 60 சதம் ரூ1920 தான்.கிடைக்கும்.

**பென்சன் அல்ல! பே அவுட்!**

என்வே தான் மத்திய அரசு இதனை பென்சன் என்று அழைக்கவில்லை.பே அவுட் என்று அழைக்கிறது.சரிதானே?

விருப்ப ஓய்வு விநோதம் விருப்ப ஓய்வு இன்னொரு வேடிக்கை.21 வயதில் ஒருவர் வேலைக்கு வருகிறார் என்போம்.25 ஆண்டு பணி செய்திருந்தால்தான் ஒருவர் விருப்ப ஓய்வில் செல்ல முடியும்.அப்போது அவருக்கு 46 வயது என்போம்.அவருக்கு எப்போது ஓய்வு வயது அதாவது 60 வயது வருகிறதோ அப்போது தான் அதாவது 14 ஆண்டு கழித்துதான் பே அவுட் கிடைக்கும். எப்படி?

அகவிலைப்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு

கணக்கிடும் முறையில் கணக்கிடப்படும் என்று முதலில் சொன்னார்கள்.எனவே மத்திய அரசு அறிவிக்கும் அதே 53 சதமானம் கிடைக்கும் என்று எல்லாரும் எதிர் பார்த்தார்கள்.ஆ னால் விதிகள் வெளியிடப்பட்டவுடன் குட்டு உடைந்துவிட்டது.தேசிய பென்சன் திட்ட ட்ரஸ்ட்தான் அகவிலைப்படியை கண்க்குப்போடும்.பி எஃப் ஆர் டி ஏ வின் மத்திய ஆவண காப்பக முகமைதான் அகவிலைப்படியை அறிவிக்கும் என்று அதில் உள்ளது.எனவே மத்திய அரசு அறிவிக்கும் அதே சதமானம் இந்த திட்டத்தில் பென்சன் பெறுபவர்களுக்கு கிடைக்காது. 2024 விலைவாசிப்புள்ளியின் சராசரியை அடிப்படையாக வைத்து 1-4-2025 க்குப்பின் அகவிலைப்படியை பூச்சியத்திலிருந்துஆரம் பிப்பார்கள்.

**லம்ப்சம் என்பது ஒரு கண்துடைப்பு தூண்டில் புழு.**

ஆறு மாத பணிக்காலத்துக்கு சம்பளம் அகவிலைப்படியின் 10 சதம் லம்ப்சம் கிடைக்கும். பழைய பென்சனில் உள்ள என்னவெல்லாம் புதிய பென்சனில் இல்லை என்று மேலே சொன்னோமோ அது எதுவும் ஒருங்கிணைந்த திட்டத்திலும் கிடையாது. தமிழக அரசு பி எஃப் ஆர் டி ஏ வுக்கு பணத்தை அனுப்பாததால் ஒருங்கிணைந்த பென்சன் திட்டம் ஒத்து வராது. எனவே தான் தமிழக ஊழியர்கள் மாநில அரசின் கமிட்டியை குப்பையில் போட்டுவிட்டு வாக்குறுதிப்படி பழையபென்சனைகேட்கிறார்கள். ஏராளமான இளைஞர்கள் அரசுப்பணியில் சேர தேர்வுகளுக்கு தயாராகி வருகிறார்கள்.தமிழக மக்களின் பிள்ளைகள் அவர்களுக்கும் பென்சன் கேட்டுத்தான் அரசு ஊழியர்கள் களம் இறங்கி இருக்கிறார்கள். அனைத்து குடும்பங்களுக்கும் பிஞ்சன் கிடைக்கட்டுமே!

**அனைவருக்கும் பென்சன்**

நமது கோரிக்கை நாட்டின் 14.43 கோடி வயதானவர்களுக்கும் பென்சன் கொடுக்க வேண்டும் என்பதுதான்.கார்ப்பரேட்டுகளுக்கு வாரி வழங்கும் மத்திய அரசு இதைச்செய்யவேண்டும். ●

**கவிதை**

# நாளை நமக்கான போராட்டம் நடந்தே தீரும்...

**- N. வேல்முருகன்**

சிறு விடுப்பு (CL)
எடுத்து
பெரும் கூட்டமாய்
அணி திரள்வோம்...

சட்டம் போட்டு
தடுக்க நினைத்தோரின்
கொட்டம் அடக்க
ஆர்ப்பரிக்கும்
ஆர்ப்பாட்டம்...

பயம் காட்டி
அடக்க
நாங்க
என் ஜி ... சங்கமா...

பயத்திற்கே
பயம் காட்டும்
ஜாக்டோ ஜியோ....

நாம
அரசாங்கத்தையே
அளற விடுறவங்க...
அதிகாரிகள் எம்மாத்திரம்....

நாளை
ஆய்வு கூட்டமென்றாலும்..
பயிற்சி கூட்டமென்றாலும்...
அத்தனையையும்
புறம் தள்ளி...
தற்செயல் விடுப்பெடுத்து
தரணி அதிர
கூடி எழுவோம் ...

பார்க்கத்தான
போறீங்க
நாளைக்கு
இந்த
ஜாட்டோ ஜியோ
ஆர்ப்பாட்டத்தை ....

உங்கள்
முகம் பார்க்கவும்...
உங்கள்
குரல் கேட்கவும்....
உங்களின்
ஆர்ப்பரிக்கும்
அழகை காணவும்
காத்திருக்கும் ... ●

# UPS எதிர் விளைவுகள்

**- பிரகாஷ்**

UPS திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சரவை கடந்த ஆகஸ்ட் 2024 அன்று அறிவிப்பு பிரச்சாரம் செய்து அதை அன்றைய தினமே பல விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டது.

நமது அரசு ஊழியர் சங்கம் பல விவாதங்களுக்குப் பிறகு கடுமையான எதிர்ப்பை பதிவு செய்ததுஅன்றைய நிலையில் அதற்கான எந்த விதிமுறைகளும் வகுக்கப்படவில்லை ஆனால் அறிவிப்பு வெளியான செய்திகளின் அடிப்படையில் நமது அரசு ஊழியர் சங்க இதழில் எள்ளளவும் பயனற்ற UPS திட்டம் என்ற தலைப்பில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் இந்த திட்டத்ினை நெறிமுறைகள் இன்னும் மத்திய அரசு வெளியிடவில்லை வெளியிட்ட பிறகு குழு அமைத்து தமிழக அரசு அதை பரிசிலீக்கும் என்று அறிவிப்பை வெளியிட்டார். அரசு ஊழியர்கள் மத்தியில் இது கடுமையான எதிர்ப்பை எதிர் விளைவுகள் ஏற்படுத்தியது அன்றைய தினம் அவருடைய பேச்சு பழைய ஓய்வூதிய திட்டம் இல்லை என்ற வார்த்தை தான் அவர் பயன்படுத்தவில்லை தவிர தேர்தல் கால வாக்குறுதியை அமல்படுத்துவதற்கு எந்த சாத்திய கூறும் அவருடைய பேச்சியில் தென்படவில்லை உடனடியாக தமிழைநாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக கண்டனத்தை பதிவு செய்தோம் தற்பொழுது அந்த பூனை வெளிவந்துவிட்டது மத்திய அரசின் திட்டத்துக்கான நெறிமுறைகளை வெளியிட்டு விட்டது நாம் அன்று என்ன சொன்னமோ அதை உறுதி செய்யும் விதமாக அதிகாரப்பூர்வமாக மத்திய அரசு அரசுதலழில் வெளியிட்டுள்ளது.

அது பெயருக்குத்தான் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் (UPS) வழங்குவதாக கூறும் தொகை ஓய்வூதியம் இல்லை உறுதி செய்யப்பட்ட தொகை (Pay out) உறுதியளிக்கப்பட்ட தொகை இது முற்றிலும் நிதி அடிப்படையில் (Fund based) திட்டம் இது முதலாளிக்கு தான் லாபம் ஊழியருக்கு இல்லை வழக்காடு மொழியில் கூறுவார்கள்

"நீ அரிசியை எடுத்து வா நான் உமி எடுத்து வருகிறேன் இரண்டையும் ஊதி ஊதி சாப்பிடலாம்" என்று அதுபோலத்தான் உள்ளது UPS ஊழியர்களின் பங்களிப்பு தொகையைக் கொண்டு இந்த திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது இது பல்வேறு வினாக்களுக்கு விடையற்று இருக்கிறது. இந்த திட்டத்தை அமுல்படுத்தப் போகும் நாள் 01/04/2025 முதல் தேசிய ஓய்வூதிய திட்டத்தில் இருப்பவர்கள்(NPS) விருப்பத்தின் அடிப்படையில் இந்த திட்டத்தில் சேரலாம்..

"விருப்பம்" என்பது என்னவென்று சற்று பார்ப்போம் ஐந்து வருடங்களுக்கு முன்பு நமது மாண்புமிகு நிதியமைச்சர் வரி பிடித்தம் தொடர்பாக பழைய வரி பிடித்தும்,(Old Regime) புதிய வரி பிடித்தம் (New Regime) என்று இரண்டு வரி பிடித்தங்களை அறிவித்தனர் விருப்பத்தின் அடிப்படையில் இந்த வரி பிடித்தை ஊழியர்கள் பின்பற்றலாம் என்று கூறினார்கள் ஆனால் இன்றைய நிலை என்ன 90 சதவீதம் ஊழியர்கள் புதிய வரி பிடித்த திட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். சேமிப்பு பழக்கத்தை முற்றிலும் ஒழித்து கட்டப்பட்டுள்ளது. இதுதான் எதார்த்தமான நிலை. ஏமாற்றத் திட்டத்திற்கு ஏராளமான நிபந்தனைகள் குறைந்தது 10 ஆண்டு பணிபுரிய வேண்டும் அப்பொழுதுதான் பத்தாயிரம் ரூபாய் உறுதி அளிப்பு தொகை. (Pay out) அப்படின்னா 10 வருடத்திற்கு குறைவாக பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் ,குடும்ப ஓய்வூதியம் ,கட்டின தொகை என்ன? என பல வினாக்களுக்கு "?" இதுதான் மிச்சம் 25 ஆண்டுகள் பணி முடித்தால் 50 % கடைசியாக 12 மாதங்கள் பெற்ற ஊதியத்தின் சராசரியின்

அடிப்படையில் உறுதித்தொகை என கூறப்பட்டுள்ளது 25 ஆண்டுகளுக்கு பின்பு தொடரும் பணிக்காலம் கணக்கில் இல்லை 25 ஆண்டுகள் பணியாற்றி ஒருவர் விருப்ப ஓய்வு பெற்றால் சொன்னபடி அவருக்கு Pay out இல்லை அவர் எப்பொழுது வயது முத்திர்வின் படி ஓய்வு பெறுவாரோ அப்பொழுதுதான் வழங்கப்படும் என்கிறது இந்த அறிக்கை அப்படிப் பார்த்தால் "கைக்கு ஏற்றினது வாய் கேட்டாத நிலைதான்" 50 % உத்தரவாதம் என்றால் அதுவும் இல்லை ஊழியர்களின் பங்களிப்பு 10 % அரசின் பங்களிப்பு 10% சதவீதம் இது ஊழியர்களின் விருப்பப்படி நிதி மூலதனத்தில் போடப்படும் (Individual corpus) அரசு வழங்கும் 8.5% அந்தத் தொகை அரசு சொல்லும் திட்டத்தில் தான் முதலீடு செய்யப்படும் (Pool corpus) இதை பார்க்கும் பொழுது நமக்கு பங்கு சந்தையை பற்றி ஒன்றும் தெரியாத இன்றைய நிலையில் நமக்கு தருவதாக சொல்லிவிட்டு பெரும் முதலாளிகளுக்கு இந்த தொகை சென்று விடும் ஒரு வேலை நமக்கு பங்குச்சந்தை தெரிந்து அதன் அடிப்படையில் முதலீடு செய்து அதனால் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டால் நாம் தான் பொறுப்பு அதன் அடிப்படையில் இழப்பீடு தொகையை நிகர் செய்தால் மட்டும் தான் 50 % Pay out உறுதியளிக்கப்படும் ஒரு வேலை எந்த விதமான விருப்பமும் தெரிவிக்கவில்லை என்றால் அரசை முடிவெடுத்து அனைத்தையும் தனியார் முதலாளி வசம் ஒப்படைத்து விடும்.

இன்றைய நிலையில் அமெரிக்காவில் ஒரு அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதன் விளைவு இங்கிருக்கின்ற பங்குச் சந்தைகள் வீழ்ச்சி நோக்கி பயணிக்கிறது உலகளாவிய பொருளாதாரச் சூழ்நிலையை உட்பட்டு தான் இந்த பங்குச்சந்தை உள்ளது இந்த பங்குச் சந்தையில் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டால் பாதிப்பது முதலாளி அல்ல அதில் பணம் செலுத்திய நாம் தான் அப்படி பார்க்கும் பொழுது அந்த சூதாட்டத்தில் நம் பணம் தான் முதலீடாக வைக்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியம் பற்றி சொல்லும் பொழுது ஒருவர் இறந்து விட்டால் குடும்பத் தொகை (Family Pay out) 60% அவரின் உத்தரவாத தொகைக்கு (Pay out) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இது சமூகப் பாதுகாப்புடன் ஒரு ஊழியரையும் அவர் குடும்பத்தாரையும் பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் தன் பொறுப்பில் இருந்து முற்றிலும் விலகி இருக்கிறது

அவர் பணிபுரிந்த காலத்தின் அடிப்படையில் தான் Pay out தொகை அப்படி பார்த்தால் குடும்ப ஓய்வூதியம் குறையும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் உத்திரவாதம் இல்லை பணிக்கொடை பற்றி எந்த ஒரு விவரமும் இதில் இல்லை மொத்தத் தொகை (Lumsum) என்பது ஒருவர் பணி புரிந்த காலங்களில் ஆறு மாதங்கள் வீதம் என கணக்கிடப்பட்டு 1/10 என்று விகிதத்தில் கொடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தற்பொழுது பணிக்கொடை 25 லட்சமாக உள்ள நிலையில் 35 வருடங்கள் பணிபுரிந்த ஒருவருக்கு ஒட்டுமொத்த தொகை 4,81,950 என மட்டும் கணக்கிடப்பட்டு கூறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த தொகை தொகுத்து பெறுதல்(Coumutation) பற்றி எந்த விவரமும் இதில் இல்லை ஊதிய குழு மாற்றங்கள் வரும்பொழுது எல்லாம் ஓய்வூதிய மாற்றப்படுவதற்கான கருத்துருக்கள் பரிசளிக்கப்படவே இல்லை அகவிலைப்படிக்கு பதில் Dearness Relief என குறிப்பிடப்பட்டுள்ளது எப்படி பார்த்தாலும் இந்த திட்டம் ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்பையும் வழங்குகின்ற பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு நிகரே இல்லை ஆகையால் பழைய ஓய்வூதிய திட்டத்தையே தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எடுக்கின்ற முடிவுகளின் அடிப்படையில் களம் காண்போம் வெற்றியை நோக்கி பயணிப்போம். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com